உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 37 | காளயுக்தி – ஆவணி – 10—9—78. | இதழ் 10

திருச்சிற்றம்பலம்

**பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை**
**பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!**
**கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!**
**நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.** சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## "தாயை வஞ்சிக்கலாமா?"

**தாய்மையின் சிறப்பு :**

தாய்க்கு ஈடான உறவு உலகில் வேறு இல்லை. வேறுபட்ட சமயநம்பிக்கையுடைய ஒரு ஆங்கிலச்சிந்தனையாளன் 'ஆண்டவனால் எல்லா இடத்திலும் இருக்கமுடியவில்லை எனவே அவன் தாயைப் படைத்தான்' எனத் தாய்மையை – இறைமையாகவே கண்டு போற்றினான். 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' 'மாதா பிதா குரு தெய்வம்', 'தாய்சொல் துறந்தால் வாசகமில்லை', 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்றெல்லாம் வழங்கிவரும் அரிய தொடர்கள் தாய்மைக்கு மதிப்பளித்துப் போற்றும் தமிழர் பண்பாட்டினை விளக்குவன. முன்னைத் தவமிருந்து, முந்நூறுநாள் சுமந்து பெற்றெடுத்த அன்னை ஒருத்தியின் தியாகத்தை உணர்ந்த நம் தமிழ்ச் சான்றோர்கள் அளப்பிலா கருணையாளனாக விளங்கும் சிவபெருமானைக் குறிக்கும்போதெல்லாம் தாயோடு ஒப்புமை கூறிச் சிறப்பித்தனர்.

**தாயுமானார் :**

'ஈன்றானுமாய், எனக்கு எந்தையுமாய்' என்ற அப்பர்பெருமான் தேவாரமும், 'பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப் பரிந்து' என்ற மணிவாசகரின் திருவாசகமும், சிவபெருமானின் கருணையைத் தாயோடு ஒப்பிட்டும், ஒருபடி உயர்த்தியும் முறையே விளக்கு

கின்றன. தந்தையாக நின்று அருள்பாலிப்பதோடு அமையாது, தாயாகவும் நின்று அருள்பாலிப்பவன் இறைவன் என்பதனைத் 'தாயுமானுர்' என்ற அரிய திருப்பெயர் நினைவூட்டுகின்றது. தாயாக நின்று தண்ணளி சுரப்பவன் என்பதோடு மட்டும் அமையாது தாய்க்கும் தாயாக - அதாவது தாயின் வயிற்றிலிருக்கும் கருவுக்கும் தாயாக இறைவன் விளங்கிக் காத்தருளுகின்ருன் என்கிருர் திரிகூட ராசப்ப கவிராயர். திருக்குற்ருலத் தலபுராணத்துள் வரும் ஒரு அரிய பாடல்,

"ஈயறியாப் பூந்தேனே எழுத்தறியா மறைப்பொருளே
காயறியாச் செழுங்கனியே கற்பகத்தின் பசுங்கொழுந்தே
தாயறியாக் கருவிலிருந் தமுதூட்டும் தாய்த்துணையே
நீயறியாச் செயலுண்டோ நிகிலபரம் பரமூர்த்தி"

என வருகிறது. இதில்வரும் 'தாயறியாக் கருவிலிருந் தமுதூட்டும் தாய்த் துணையே' என்றவரி தாய்க்கும் தாயாகநின்று அருள்செய்யும் இறைவன் கருணையை விளக்குகின்றது.

'பாரனைத்தும் பொய்' என்று முற்றத் துறந்த பட்டினத்துப் பிள்ளையார் போன்ற சான்ருேரும் தாய் அன்பில் தலைநின்ற வரலாறு, அதனைப் போற்ற வேண்டிய கடமையை நமக்கு வலியுறுத்துவ தாகவே அமைகிறது. தாய்மையைப் போற்ருத கவிஞர் இலர். அதனை இறைமையோடு இணைக்காத நூல்களும் இல்லை.

**நன்றியற்ற வஞ்சனை :**

உயிரைப் பணயம் வைத்து ஈன்று, இரவெல்லாம் கண் விழித்து, குழந்தைநோய்க்குத் தான் மருந்துண்டு, பசியறிந்து, தனக்கில்லை யாயினும் குழந்தைக்கு உணவிட்டுப் போற்றும் கண்கண்ட தெய்வ மாக அல்லவா தாய் விளங்குகிருள். இவ்வாறு தாய் ஒருத்தியால் வளர்க்கப்பெற்ற மகன் ஒருவன், வளர்ந்த நிலையில் சிறிதும் கடமை உணர்வோ, நன்றியுணர்வோ இன்றித் தன்தாய்க்கு உணவு மற்றும் உடை முதலியன வழங்காததோடு, பிறர் வழங்கினும் வழங்காதே எனத் தடுத்து, அன்னையிடம் இருக்கும் ஒன்றிரண்டு உடைமைகளை யும் பறித்துக்கொள்ளக் கருதுவானுயின் அவனை என்னவென்று அழைப்பது ? 'நன்றியற்ற வஞ்சகன்' என்று கூறலாமா என எண்ணவேதோன்றும்.

**அரியதோர்பேச்சு :**

தமிழ் நாடு நன்றியுணர்வில் தலைநிற்பது. 'எந்நன்றி கொன் ருர்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்பார் வள்ளுவர். வள்ளுவர் வழியில் வந்த நல்லுள்ளம்கொண்ட பெரியார் ஒருவர் பேசிய பேச்சு ஒன்றை, அண்மையில் செய்தித் தாள் ஒன்று வெளியிட்டிருந்தது. அச்செய்தி தனியே இவ்விதழில் ஒருபக்கத்தில் வெளியிடப்பெற்றிருக்கிறது. அவர் கூறுகிருர் :

**" இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்குத் தமிழ்நாட்டில்தான் அறுபதாயிரத்துக்கும் மேற்பட்ட கோயில்கள் இருக்கின்றன. கோயில் நிலங்களைக் குத்தகைக்கு எடுத்தவர்கள் அதற்கான பணத்தைப் பாக்கியில்லாமல் கட்டிவிட வேண்டும். "**

யாரோ இந்து ஆலயப் பாதுகாப்புக் குழுவின் கூட்டத் தீர்மானம் போல் மேற்கண்ட வாசகம் தோன்றுகின்றது அல்லவா ? ஆம், கோயில்களுக்குரிய குத்தகைகளை ஒழுங்காகக்கட்டாது ஏமாற்றுபவர்களைப் பற்றி அப்பெரியவர் என்ன கூறுகிருர் என்று கேட்க விரும்புகிறோம்.

**" ஆண்டவனுக்குத் துரோகம்செய்ய நினைப்பது, பெற்ற தாய்க்குத் துரோகம் செய்வதாகும். "**

துணிச்சலான இந்தக் கண்டனத்தை நம் நெஞ்சு வரவேற்கின்றது. தாய்மையில் கடவுளைக்காணுகின்ற நாம், கடவுளை ஏமாற்றுபவர்களைத் தாயையே ஏமாற்றுகின்ற வஞ்சமனத்தாராகவே கொள்ளவேண்டியுள்ளது. இந்தத் துணிச்சலான கண்டனத்தைத் தக்க நேரத்தில் அஞ்சாது எடுத்துரைத்த அந்தப் பெரியவர் யார் எனத் தெரிந்து கொள்ள விரும்புகின்றோம். நம் வியப்பு இருமடங்காகிறது. நமது மாண்புமிகு. அறநிலையத்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்களது இக்கண்டனத்தை நல்லுள்ளம் கொண்டோர் வரவேற்கவேசெய்வர்.

சென்ற ஞானசம்பந்தம் இதழில் நமது பாரதக் குடியரசுத்தலைவர் அவர்கள் தம்மைக் கோயிலிலிருக்கும் மூலவரோடு ஒப்பிட்டுப் பேசி அரிய பல சிந்தனைகளைத் தூண்டிய செய்தி தலையங்கத்தில் இடம் பெற்றது. தத்துவம் உணர்ந்தோ உணராமலோ அவர் பேசிய ஒப்புமை இறையியலோடு பெரிதும் பொருந்திநின்று மகிழ்வூட்டியது. அதுபோல் நமது அறநிலைய அமைச்சர் ஆண்டவனைத் தாயோடு ஒப்பிட்ட ஒப்புமை அரிய பல சிந்தனைகளை நம் முன்னே கொண்டு வந்து மகிழ்வூட்டுகின்றது.

**சமூக அநீதி :**

தாய்ப்பாலுண்டு, அவள் உண்ட மருந்தால் நலம்பெற்று, அவள் இடும் உணவாலேயே வாழ்ந்துவரும் ஒருவன் அவளை வஞ்சிப்பது எவ்வளவு அறிவீனமோ, அதேபோல, தாய் அறியாக் கருவில்இருந்து அமுதூட்டும்தாயான இறைவனுக்குரிய நிலபுலன்களைஉழுதுபயிரிட்டு உண்டு வாழ்ந்துவரும் ஒருவன் அவ்விறைவனது ஆலயத்துக்கு உரிய வருவாயில் ஒருபகுதியை வழங்காது கடமை தவறுவதும் அறிவீனமே என்பதைத் தெளிவுபடுத்தும் அமைச்சரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். 'சிவன் சொத்து குலநாசம்' என்ற ஒரு பழமொழி உண்டு. நூற்றுக்கணக்கானவர்களுக்குரிய பொருளை ஒருவனே அனுபவிப்பதை

எந்தச் சமரசவாதியும் உடன்படமாட்டான். இறைவன் பெயரால் ஆயிரக்கணக்கான மக்களுக்குச் சென்று சேரவேண்டிய திருக்கோயில் வருவாயை - அதன் நிலங்களை அனுபவித்துவரும் ஒருசிலர், முறையாக வழங்காது – தாமே அனுபவிப்பது தாய்க்குச்செய்யும் துரோகமாக மட்டும் அமையாது, சமூகத்திற்கே இழைக்கும் அநீதியாகவே கொள்ளவேண்டும்.

**இரண்டு சிந்தனைகள் :**

தமிழகத் திருக்கோயில் நிலங்களைக் குத்தகைக்குப் பெற்றுக் கொண்டு, உரிய வருவாயை வழங்காதவர்களைப் பற்றி அறநிலைய அமைச்சர் அறிவுரைகள் கூறி - தர்ம நியாயங்களைப் பேசிக் கொண்டிருக்கிறரே! சட்டம் தன்கையில் இருக்கிறது; விரைந்து இத்தகையவர்கள்மேல் நடவடிக்கை எடுக்கக் காலம் தாழ்த்துவது ஏன்? என்றெல்லாம் ஐயம் எழுவது நியாயமானதே. நம்மைப் பொறுத்தவரை இத்தாமதத்தை இரண்டுவகையாகக் கருதவேண்டியுள்ளது. ஒன்று, சட்டபூர்வமான மாற்றத்தைவிட, தார்மீகமான மனமாற்றத்திற்கே வலிமை அதிகம் என்று அரசுகருதியிருக்கவேண்டும். அல்லது சாம, தான, பேத, தண்டம் என்ற முறையில் படிப்படியாக அணுக எண்ணியிருக்கவேண்டும். எங்ஙமாயினும் விரைவான ஒரு தீர்வுக்கு வழிகாணவேண்டிய கடமையும் பொறுப்பும் அமைச்சர் அவர்களுக்கும் அரசுக்கும் உண்டு என்பதைப் பணிவோடு நினைவூட்ட வேண்டியது நமது கடமையாகிறது. அப்பதவி வாய்ப்பு அமைந்திருக்கும் போது செய்யவேண்டிய செயலை உடனடியாகச் செய்ய வேண்டும். 'செய்தக்க செய்யாமையானும் கெடும்' என்பது வள்ளுவர் வாய்மொழியன்றே! புரையோட விட்டுவிடாதீர்கள்; விரைந்து முடிவுகாணுங்கள் என்று வேண்டுகிறோம்.

**எங்கேபோகின்றன :**

அமைச்சர் அவர்கள் குத்தகைதாரர்களின் - இச்செயல்களுக்கு விளைவின்மை காரணமன்று - அரசியல் ஆதாயங்களே காரணம் என்பதனை அழகாக விளக்கியுள்ளார்,

> **'கோயில்களுக்குக் குத்தகை கொடுக்காதே! என் கட்சிக்கு நன்கொடை கொடு' என்று சில அரசியல் வாதிகள் கூறிவருகின்றார்கள்.**

எனவே, கோயில் நிலவருவாயை, உழும் குடிபடைகளே அனுபவிப்பதும் இல்லை என்பதும், கோயிலுக்குக் கிடைக்கவேண்டிய பங்கு, அரசியல் கட்சிகளுக்குச் சென்று விடுகின்றன என்பதும் தெளிவாக அமைச்சர் உரையால் விளங்குகின்றது.

**வரப்புயர வாழ்த்து :**

சோழமன்னன் அரசவைக்கு வந்த ஔவையார் ஒரு முறை மன்னனை நோக்கி 'வரப்புயர' என்று வாழ்த்தினர். மன்னவன் புரியாது நின்றான். ஔவையார் தன் வாழ்த்தின் உட்பொருளை விளக்கியருளினர். மன்னா! வரப்புயர என வாழ்த்தினேன்! வரப்புயர்ந்தால் நீர் உயரும்! நீர் உயர்ந்தால் நெல் உயரும்; நெல் உயர்ந்தால் கோல்உயரும், கோல் உயர்ந்தால் கோன் உயர்வான்! இதுவே என் வாழ்த்தின் உட்பொருள் என்றார். ஆலயங்கள் வளர்க! வாழ்க! என்று நாம் கூறுவதன் உட்பொருளையும் இவ்வாறு ஆழ்ந்து நோக்கவேண்டும். அறநிலைய அமைச்சர் அவர்களுக்கு அப்பார்வை சிறந்திருக்கிறது. சமயபுரப்பேச்சில்,

> 'ஆலயம் வளர்ந்தால்தான் கலைவளரும்; தமிழ்வாழும்;
> தமிழ்ப் பண்பு நிலைத்து நிற்கும்'

என்று இனங்கண்டு அமைச்சர் கூறியன இச்சிந்தனைக்கு நம்மை இட்டுச்செல்லுகின்றது. தமிழகத்துத் திருக்கோயில்களும் திருமடங்களும், பிற அறநிலையங்களும் பக்திப் பயிர் வளர்க்கும் வயல்களாக மட்டும் விளங்குவன அல்ல. கோயில் வளர-பக்தி வளரும்; பக்தி வளரப் பண்பாடு வளரும்; பண்பாட்டால் கலைசிறக்கும்; கலைகளால் மொழி உயரும், மொழியால் இனமேவாழும் என்பது நம்பெரியோர் கண்ட அரிய உண்மை. சைவ - சமயாசாரியர்களுள் முதல்வராகிய திருஞானசம்பந்தரைச் சைவம் வளர்த்தவராகக் குறிப்பிடாமல் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தர் என்றார். காரணம் தமிழ்வளர்ந்தால் பக்தி கலை பண்பாடு அனைத்தும் வளரும் என்பதால்தான்.

> 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்'

எனக்குறிப்பிடும் சுந்தரரின் திருவாக்கும் பிறவும் இவ்வுண்மைகளை விளக்குவன.

**சமயபுரச் சிந்தனை :**

அரசு உண்மைநிலையை உணர்ந்திருக்கிறது என்ற மகிழ்ச்சியும், இதனால், பல்லாண்டுகளாக முடங்கிக் கிடந்த தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள் எழுச்சிபெறும் என்ற நம்பிக்கையும், பக்திமிக்க அன்பர்கள் அரசின் விரைந்த நடவடிக்கைகளுக்குப் பின்னணியாகநின்று ஊக்கமூட்டவேண்டுமென்ற வேண்டுகோளும் - அமைச்சரின் சமயபுரப் பேச்சால்விளைந்தன. இவ்வரிய பேச்சும் சமயபுரத்தில் அல்லவா தோன்றியிருக்கிறது. அதுவும் நல்ல சமயத்திலல்லவா வெளிவந்திருக்கிறது.

வாழ்க சமயநிலையங்கள்.
வளர்க பண்பாட்டுக்கலை.

உ
குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26-ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்
2—5—78 அன்று நடைபெற்ற
திருவாமூர் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழாவில்
வழங்கியருளிய

# ஆசியுரை

இடையறாப் பேரன்பும் மழைவாரும் இணைவிழியும் உழவாரத்திண்
படையறாத் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன் ஞானப்பாடல்
தொடையறாச் செவ்வாயும் சிவவேடப் பொலிவழகும் துதித்து
[ வாழ்வாம்.

**குருபூஜை :**

எல்லாம்வல்ல இறைவன் உயிர்களுக்குக் கண்முன்தோன்றி அருளுதற்குக்கொண்ட வடிவம் குரு லிங்க சங்கமம் என மூவகைப் படும். இறைவனை இம்மூவகைத் திருமேனிகளில் வழிபடுவதை முத்திற வழிபாடு எனக் குறிப்பிடுவர் பெரியோர். பெரியபுராணத்துள் கூறப்படும் அறுபான்மும்மைநாயன்மார்களும் இம்மூவகை வழிபாட்டு நெறிகளை மக்கட்கு உணர்த்தியருளிய பெரியோர்களாவர்.

இறைவனை வழிபடும் மூவகை வழிபாடுகளில் முதலாவதாகக் கூறப்படுவது குரு வழிபாடு. குரு என்பதற்கு அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞ்ஞானத்தை அருள்பவர் என்பது பொருள். குரு - தீக்ஷா குரு, வித்தியா குரு, போதக குரு என மூவகைப்படுவர். சைவ சமய வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கி, உபதேச மொழி களால் உலக மக்களின் ஈடேற்றத்திற்குரிய அறவுரைகளை அருளி, இறைவன் திருவடிகளில் நம்மை ஈடுபடுத்தியருளிய அவ்வாசாரியர் களை நாடோறும் நாம் நன்றியோடு சிந்தித்துப் போற்றுதல்வேண்டும். அப்பெரியோர்களை நாம் நாடோறும் போற்றுதலோடு அமையாது அவர்கள் இறைவன் திருவடிகூடிய நன்ஞானைச் சிறப்பாகக் குருபூசைத் திருநாளாகக் கொண்டாடி மகிழ்தலும் வேண்டும்.

இன்று அப்பர் சுவாமிகள் குருபூசைத் திருநாள். இன்றைக்கு ஆயிரத்துமுந்நூறு ஆண்டுகளுக்குமுன் இவ்வூரில் திருவவதாரம் செய்து சமணம் முதலிய புறச்சமயங்களைக் களைந்து சைவப்பெரு நெறியை இந்நாட்டில் தழைக்கச்செய்தருளிய-திருத்தொண்டின் நெறியோடு தேவாரத் திருமுறைகளை நமக்கு வழங்கி இறைவனடிகூடிய அப்பர்பெருமானை அவர் திருவவதாரம்புரிந்த இம்மண்ணிலிருந்து போற்றும் பெரும்பேற்றை இன்று நாம் பெற்றிருக்கிறோம். இத்தகைய அருளாளர்களைச் சிவமாகவேகருதி வழிபடுதல் நம் சமயமரபாகும்.

**குருவே சிவம் :**

தத்துவாதீதனாகவிளங்கும் பரம்பொருள் உயிர்களை ஆட்கொண்டு அவர்கட்கு நலம் செய்யும் பொருட்டுத் தத்துவங்களை உயிர்களுக்குப் படைத்தளித்துதவுகிறான். தத்துவங்கள் கருவிகள் எனப்படும். அத்தத்துவங்கள் ஆன்மதத்துவம் 24, வித்தியாதத்துவம் 7, சிவதத்துவம் 5. ஆக முப்பத்தாறுகும். இவற்றின் உட்பிரிவுகள் 60 வகைப்படும். அனைத்தையும்கூட்டி மண்முதல் நாதமீறாக 96 தத்துவங்கள் எனக் கூறுவர்.

நாதம் - சிவம் விளங்குமிடம். விந்து சக்தி விளங்குமிடம். சாதாக்கியம் குருவின் இருப்பிடமாகும். தத்துவ அமைப்பில் குரு மூன்றாவது தத்துவத்தில் விளங்குகின்றார். புவனாம்பிகை கலைஞான தீபம் என்ற நூலில்,

பேராத மும்மலம் பேர்த்துத் திருவடிப் பேறுநல்கி
வாரா தெவர்க்கும் அரிதாய உண்மையின் வாழ்வருளித்
தீராத வல்வினை தீர்த்த குருவின் திருவுருக்கொண்(டு)
ஆராத இன்பச் சுகாதீதம் நல்கினள் அம்பிகையே.

என்னும் பாடலில் அம்பிகையேகுருவாகவந்து நம்மை ஆட்கொண்டருளுகின்றாள் என்ற கருத்தை அந்நூலாசிரியர் தெரிவித்துள்ளதை நாம் உணரலாம். சிவம் குருவாக வருவதுபோலவே அடுத்தநிலையில் அம்மையும் குருவாகவந்து ஆட்கொள்வதை இப்பாடல் தெரிவிக்கின்றது.

**மூவகை உயிர்கள் :**

உலகில் காணப்படும் உயிர்கள் தகுதியால் மூவகைப்படுவர். ஒரு மலமுடைய உயிர்கள் விஞ்ஞானகலர் எனப்பெறுவர். இவர்களுக்கு இறைவன் உள்நின்று உணர்த்துவான். இருமலமுடைய உயிர்கள் பிரளயாகலர் எனப்படுவர். இவர்கட்கு இறைவன் மான் மழு முதலியவற்றோடு காட்சியருளி ஆட்கொள்வான். மும்மலமு

உடையவர்கள் சகலர் எனப்படுவர். இவர்களை இறைவன் குருவாய் வந்து ஆட்கொண்டருளுவான் என்று கூறுகின்றன நமது சாத்திர நூல்கள். அருளாளர்கள் பலரும் தம்முடைய ஆசாரியர்களைச் சிவமாகவே கருதி வழிபட்டதைக் காணலாம். அருணந்தி சிவாசாரியார் தமது ஞானாசிரியராகிய மெய்கண்டாரைச் சிவமாகவே கருதி வழிபட்டார் என்பதை,

கண்ணுதலும் கண்டக் கறையும் கரந்தருளி
மண்ணிடையில் மாக்கள் மலமகற்றும் – வெண்ணெய்நல்லூர்
மெய்கண்டான் என்றொருகால் மேவுவரால் வேறின்மை
கைகண்டார் உள்ளத்தின் கண்.

என்ற பாடலால் உணர்த்தியருளுகின்றார். நாமும் நம் சமயாசாரியர்களையும் சந்தானாசாரியர்களையும் சிவமாகவே கருதி வழிபடவேண்டும்.

**அப்பர் அறவுரை :**

திருநாவுக்கரசு சுவாமிகள் உலகிற்கு வழங்கிய அறவுரைகள் பன்னிரு திருமுறைகளில் 4, 5, 6-வது திருமுறைகளாக விளங்குகின்றன. நான்காம் திருமுறை பல்வகைப் பண்களையும் கொண்டுள்ள பதிகங்களின் தொகுப்பாகும். 5–வது திருமுறை திருக்குறுந்தொகைப் பதிகங்களைக் கொண்டும், 6-வது திருமுறை திருத்தாண்டகப்பதிகங்களைப் பெற்றும் திகழ்கின்றன.

திருநாவுக்கரசு சுவாமிகள் 5-ஆம் திருமுறையில் அருளிச் செய்துள்ள அறவுரை ஒன்றை இன்று சிந்திப்போம்.

உலகில் வாழும் மக்களில் பலர் பின்வரும் கேள்வியைஎழுப்புவர். கடவுளை நாமே நினைந்து வழிபடுகின்றோமா? அல்லது கடவுள் நம்மை நினைப்பித்து வழிபடும்படிச் செய்கின்றாரா? என்பது அக் கேள்வி. இக்கேள்விக்கு அப்பர் சுவாமிகள் விடைகூறும் நிலையில் ஒரு திருப்பாடலை அருளிச்செய்கின்றார். அப்பாடலைக் கூறுவதற்கு முன் சில உண்மைகளைத் தெரிந்துகொள்ளுதல் நல்லது.

சிவபெருமான் உயிர்களைத் துன்பத்தினின்றும் நீக்கிப் பேரின்பமாகிய திருவடிப்பேற்றை நல்குதற்பொருட்டு உடம்பையும் கருவி கரணங்களையும் தந்தருளுகின்றார். நடுக்கடலுள் தத்தளிக்கும் ஒருவனுக்குக் கரைசேறற்பொருட்டுத் தெப்பம் ஒன்று கொடுத்துதவுவது போலக் கருமையான ஆணவமலம் என்னும் கருவறையில் கண்ணிலாக் குழவியைப்போல் கட்டுண்டு கிடந்த உயிர்கள் அறிவு பெற்று உய்திபெறவேண்டும் என்னும் பெருங்கருணையினால் அவ் வுயிர்கட்கு இறைவன் உடல் கருவி கரணங்கள் உலகம் அதனைத் துய்க்கும் உணர்வு ஆகியவற்றை வழங்கினான். ஆனால் அவற்றைப் பெற்ற உயிர்களில் பல, இவை இறைவனால் நாம் கரைசேர்தற்

பொருட்டுத் தந்தருளியவை என்ற உணர்வின்றிக் கருவி கரணங்களைத் தீய வழிகளில் செலுத்திப் பிறந்திறந்து உழல்கின்றன.

இறைவன் உயிர்கட்கு அறிவிச்சைசெயல்கள் உண்டாகவேண்டுமென்று நினைவதனாலேயே நமக்கு அம் மூவகை ஆற்றலும் உண்டாகின்றன என்ற உண்மையை உணர்ந்தால்தான் நாம் கடைத்தேறமுடியும். அருளாளர்கள் பலரும் இவ்வுண்மையைப் பல நூல்களினாலும் ஆங்காங்கு உணர்த்தியுள்ளனர்.

இறைவனை நினைக்கும் உணர்வை அவ்விறைவனே தந்தருளுகின்றான் என்பதை 'அவனருளாலே அவன் தாள்வணங்கி' என்று மணிவாசகரும்,

" என்னை நினைந்தடிமை கொண்டென் னிடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான் — புன்னை
விரசுமகிழ் சோலை வியன் நாரை யூர்முக்கண்
அரசுமகிழ் அத்திமுகத் தான்"

என்ற பாடலால் நம்பியாண்டார் நம்பிகளும் உணர்த்தியருளுகின்றனர். 'காண்பார் ஆர் கண்ணுதலாய்க் காட்டாக் காலே' என்று அப்பரடிகளும் தெரிவிக்கின்றார். பிறிதோர் ஒளியின்றித்தானே காண மாட்டாத கண்போன்றது உயிர். இறைவன் உயிரிற்கலந்து பொருள்களை அறியச் செய்தால்தான் உயிர் அறியும். ஆதலின் திருவிசைப்பா ஆசிரியர் விளம்புமா விளம்பு, கருதுமாகருது. நுகருமா நுகர், நினையுமா நினை என்றெல்லாம் இறைவனை வேண்டுவதைக் காண்கிறோம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் இறைவன் அறிவித்தாலன்றி உயிர்கள் அறியா என்ற உண்மையைக் கூறும் பாடலைக் காண்போம்.

" என்னை ஏதும் அறிந்திலன் எம்பிரான்
தன்னை நானும்முன் ஏதும் அறிந்திலேன்
என்னைத் தன்னடி யான்என்று அறிதலும்
தன்னை நானும் பிரான் என்று அறிந்தெனே "

என்பதுதான் அத்திருப்பாடல்.

பெருமானே ! நீ உணர்த்தியருளுதற்குமுன்னால் என்னையே நான் அறியாதவனாக இருந்தேன். எனக்குத் தலைவனாக விளங்கும் உம்மையும் அறியாதவனாகவே இருந்தேன். என்பால் கருணை கொண்டு தேவரீர் என்னை அடியவனாகத் திருவுளம்பற்றியதால் நானும் என்னை உணர்ந்தேன் ; உம்மையும் தலைவன் என்று அறிந்தேன் என்பது இப்பாடலின் பொருளாகும்.

**கேள்விக்குப் பதில் :**

நாமே கடவுளை நினைக்கின்றோமா? கடவுள் நம்மை நினையும்படிச் செய்கின்றாரா? என்ற கேள்விக்கு இப்பாடல் தெளிவான விடை தருவதை நாம் நன்குணரலாம்.

கடவுள் நம்மை நினைப்பிக்கின்றபோதுதான் நாம் அவரை உணர முடியும் என்ற உண்மை இப்பாடலில் நன்கு தெளிவுசெய்யப்படுகிறது. என்னைத் தன் அடியான் என்று அவர் நினைதலினாலேயே, நான் என்னை அடிமை என்றும் அவரைத் தலைவன் என்றும் உணரும் அறிவைப்பெற்றேன் என்று அப்பர்பெருமான் கூறியருளும் அறவுரை நமக்குச் சிறந்த உண்மையை உணர்த்துகிறது.

**தற்செயல் :**

அப்பர் அருளிய இப்பாடலில் மற்றொருசிறப்பும் அமைந்துள்ளது. இப்பாடலில்வரும் தன் என்ற சொல்லுக்குச் சிவம் என்பதுபொருள். தன் என்ற சொல் சிவபெருமானைக் குறிக்கும் சொல் என்பதை மெய் கண்டாரும் சிவஞானபோத அவையடக்கச் செய்யுளில் ‘ தம்மை யுணர்ந்து தமை உடைய தன்னுணர்வார் ’ என்ற வெண்பாவினுல் உணர்த்தியுள்ளார். உலக வழக்கில் ‘ தற்செயல் ’ என்று கூறும் வழக்கு உள்ளது. அத்தொடருக்கு இயல்பாக நடந்த நிகழ்ச்சி என்றே எல்லோரும் நினைக்கின்றனர். இறைவன் செயல் என்பதே அத் தொடரின் பொருள் என்பதை நாம் மறந்துவிடுகின்றோம். அறிந்தோ அறியாமலோ இறைவன் செயலால் தான் எல்லாம் நடைபெறுகிறது என்று உணர்கிறபோது கடவுட் சிந்தனை வாழ்க்கையில் எவ்வளவு ஊடுருவிநின்று நலம்பயக்கிறது என்ற உண்மையை நாம் அறிந்து மகிழமுடிகிறது.


இத்தகைய பல்வேறு உண்மைகளை உணர்த்தும் திருப்பாடல்கள் அப்பர் அருளிய திருமுறைகளில் உள்ளன. தமிழ்மக்களுக்குச் சேம நிதியாகக் கிடைத்துள்ள இத்தகைய திருமுறைகளைப் போற்றிப் பயன் கொள்ளல் நம் கடமையாகும்.

அப்பர்பெருமான் குருபூஜைவிழாவில் கலந்துகொண்ட மெய்யன் பர்களுக்கும், இவ்விழாவைச் சிறந்த முறையில் நடைபெறச்செய்யும் அன்பர்கட்கும் எல்லா நலன்களும் உண்டாகுமாறு செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்தித்து நிறைவுசெய்கிறோம்.

இறைவன் நான் உய்யவேண்டும் என்று நினையாதபோது
இறைவனை நானும் நினையாது இருந்தேன்
இறைவன் என்னைத் தன் அடிமைஎன்று நினைந்தபோது
இறைவனை நானும் தலைவன்என்று அறிந்து உய்ந்தேன்.

தருமையாதீனம்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களிடம்



அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகப் பதவியேற்ற

**திரு. B. S. சோமசுந்தரம் அவர்கள் மகன் பேரனுடன்**

ஆசி பெறுதல்

6—9—78

உ

சிவமயம்

# ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் 26 - ஆவது குருமகாசந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** தமது குருமூர்த்திகள் காட்டியருளிய வழியிலேயே தமது ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் பாடல்பெற்ற தலங்கள் தோறும் முறையான வழிபாட்டிற்கு வழிகாட்டி வருகின்றார்கள். காவிரித் தென்கரைத்தலங்களில் ஆயில்யத்திருநாள் வழிபாடு நடைபெறுகிறது. உழவாரப்பணி, விசேட அபிடேக ஆராதனைகள், தலத்திருப்பதிகங்களை அச்சிட்டு ஓதி வழங்குதல், சமயப்பிரசாரம் முதலியன ஆயில்யத்திருநாள் வழிபாட்டின் அங்கங்களாகும்.

நிகழும் **காளயுக்திஆண்டு புரட்டாசித்திங்கள் 12ஆம்நாள் ( 28 — 9 — 1978 )** வியாழக்கிழமை காலை 9-மணி அளவில் **திருப்பாலைத்துறை அருள்மிகு தவளவெண்ணகையாள் உடனுகிய அருள்மிகு பாலைவனநாதர் ஆலயத்திலும். மாலை 6 மணி அளவில் திருக்கருகாவூர் அருள்மிகு கரும்பனையாள் உடனுகிய அருள்மிகு முல்லைவனநாதர் ஆலயத்திலும்** விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் ஆயில்யத்திருநாள் சிறப்புவழிபாடுகள் நடைபெறும்.

அன்பர்கள் அனைவரும் வருக! **வழிபட்டு உய்க! அரன்** அருள் பெருக.

---

**குறிப்பு:-** காலை 8-மணி அளவில் தொடங்கி அன்பர்கள் பலரும் உழவாரத்திருப்பணிபுரிவர். அன்பர்கள் வழிபாட்டிற்கு உரிய பால் இளநீர் முதலிய அபிஷேகத் திரவியங்கள் கொண்டு வரலாம்.

# திருத்தென்குடித்திட்டை, திருப்புள்ளமங்கை, திருச்சக்கரப்பள்ளித் தலச்சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,
**வித்துவான். திரு. வி. சா. குருசாமிதேசிகர் எம்.ஏ.,**

சோழவளநாட்டில் காவிரியின் தென்கரையில் விளங்கும் தலங்களில் 15, 16, 17 ஆவது தலங்களாக எண்ணப்பெறும் இத்தலங்கள் மூன்றும் திருஞானசம்பந்தர் அருளிய ஒவ்வொரு திருப்பதிகத்தைப் பெற்றுத் திகழ்வனவாகும்.

## 1. திருத்தென்குடித்திட்டை

இத்தலம் கும்பகோணம் தஞ்சாவூர் இருப்புப்பாதையில் திட்டைப் புகைவண்டி நிலையத்திலிருந்து மேற்கே 2 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. தஞ்சையிலிருந்து மிலட்டூர் வழியாகத் திருக்கருகாவூர் செல்லும் நகரப் பேருந்தில் சென்றால் திருக்கோயிலின் வாயிலில் இறங்கலாம்.

இறைவன் தானே சிவலிங்க உருவாய்த் தோன்றி அருள்புரிந்த சிதம்பரம், திருக்கழுக்குன்றம், திருவண்ணாமலை, திருவாரூர், திருவையாறு முதலிய இருபத்தெட்டு சுயம்புத்தலங்களில் திட்டையும் ஒன்றாகும். காவிரிநதியின் கிளைநதிகளாகிய வெண்ணாறு வெட்டாறு என்னும் இரண்டு ஆறுகளின் இடையில் இத்தலம் உள்ளது.

இத்தலத்திற்குத் தலபுராணம் ஒன்று அச்சாகியுள்ளது. தென்குடித்திட்டை என்னும் இத்தலப்பெயர் வடமொழியில் தக்ஷிண குடத்வீபம் என வழங்கப்படுகிறது.

**புராணச் சிறப்பு :**

இத்தலத்தில் தேவர்கள் சிவபெருமானை வழிபட்டுத் தவம் புரிந்து விரும்பியபயன்களை அடைந்திருக்கிறார்கள். தாயின் சாபம் அகல யமனும், இளை ஆண்வடிவம்பெற மநுவும், பிரம்ம வித்துக்களுள் சிறந்தவராக வசிஷ்டரும், பழைய உருவத்துடன் மதாலசையை அடையச் சங்கபாலனும், தந்தையின் சாபத்தால் நேர்ந்த சர்ப்ப உருவம் நீங்க முருகக்கடவுளும், பிரமன்தலையைக் கிள்ளியதால்

நேர்ந்த பிரமகத்தி தோஷம் நீங்கப் பைரவரும், படைக்கும் சக்தியை மீண்டும் பெறப் பிரமதேவரும், மது கைடபர்களை அழிக்கும் ஆற்றல்பெற மகாவிஷ்ணுவும் இத்தலத்தில் தவம் புரிந்துள்ளார்கள்.

இத்தலத்தில் மகாபாதகங்களை நீக்கும் சூல (பசு) தீர்த்தமும், சக்கரதீர்த்தமும் விளங்குகின்றன. சுமாலி என்பவனின் இரதம் (தேர்) அழுந்தியதால் ரதபுரி எனவும், தமிழில் தேரூர் எனவும் இத்தலம் வழங்கப்பெறும்.

உலகம் பிரளய வெள்ளத்தால் சூழப்பட்ட காலத்தில் இத்தலம் ஐந்துகுரோசதூரம் திட்டாகத் தோன்றியது என்றும் இத்தலத்தில் இறைவன் சுயம்புமூர்த்தியாக வெளிப்பட்டு அருள்புரிந்தான் என்றும் கூறுவர்.

கிருதயுகத்தில் வசிஷ்டர் பலாசவனம் என்றும், திரேதாயுகத்தில் பைரவர் சம்யாகவனம் என்றும், துவாபரயுகத்தில் ஆதிசேஷன் வில்வவனம் என்றும், கலியுகத்தில் மங்களாதேவி மாலதீவனம் என்றும் வழங்குமாறு பெயர் சூட்டியுள்ளனர்.

இத்தலத்தில் ஜயசோழமன்னனால் செய்யப்பட்ட ருத்திரபாசுபத யாகம், நூறு அசுவமேதயாக பலனுகிய இந்திரபதத்தை அவனுக்கு அளித்தது.

இத்திருத்தலத்தில் விளங்கும் அருள்மிகு உலகநாயகியின் அருளால் சங்கபாலன் என்பான் இறந்த மதாலசையைப் பழைய உருவத்துடன் அடைத்தான். சுகந்தி என்பவள் கணவனைப் பிழைப்பித்தாள். மங்களை என்னும் வைசியப் பெண்ணின் வைதவ்யம் நீங்கியது.

புஷ்டி விநாயகர் அனுக்கிரகத்தால் இந்திரன் காவிரியை அகத்திய முனிவரின் குடத்திலிருந்து வெளிப்படுத்தினன். சுதாகணேசரின் அருளால் தேவர்கள் அமுதத்தை அடைந்தார்கள். இந்திரன் பாகன் முதலிய அசுரர்களின் துன்பத்திலிருந்து விடுபட்டான். பால விநாயகரின் அருளால் திருமால் மதுகைடபர்களை அழித்தார். சிந்தூர கணபதியின் அருளால் பிரமன் படைக்கும் திறனையும் நினைத்தது கைகூடும் வன்மையையும் பெற்றுன்.

கரந்தையைத் தலைமையாகக்கொண்ட சப்தஸ்தானங்களில் இத் தலமும் ஒன்றுகக் கூறப்படுகிறது. அவ்வேழுதலங்களாவன: 1. திருக் கருந்திட்டைக்குடி. 2. திருவெண்ணுறு. 3. திருத்தென்குடித்திட்டை. 4. திருக்கூடலம்பதி. 5. திருக்கடனபதம். 6. திருப்புன்னைநல்லூர். 7. திருப்பூமாலை ராவுத்தன் கோயில்.

திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பதிகம் ஒன்றை இத்தலம் பெற்று விளங்குகிறது.

**மூர்த்திகள் :**

இறைவன் திருப்பெயர் அருள்மிகு பசுபதிநாதர் என்பதாகும். வசிட்டேசுவரர் எனவும், தேரூர்நாதர் எனவும், தேனுபுரீசுவரர் எனவும் வழங்கப்பெறுகிறர். இறைவியின் திருப்பெயர் அருள்மிகு உலகநாயகி என்பதாகும். மங்களநாயகி எனவும், சுகந்த குந்தளாம்பிகை எனவும் வழங்கப்பெறுகிறர்.

**கோயிலமைப்பு :**

பேருந்துகள் செல்லும் சாலையை அடுத்துள்ளது திட்டைத்திருக் கோயில். எதிரே திருக்குளம். கோயில் கிழக்குநோக்கி விளங்குகிறது. இத்திருக்கோயிலை அடி முதல் முடிவரை கருங்கல் திருப்பணியாகச் செய்துமுடித்தவர் பலவான்குடி திரு. இராம. கு. இராமசாமிச் செட்டியார் ஆவார். செங்கல் சுண்ணும்பு மரம் இரும்பு இவை கலவாது முற்றிலும் கருங்கற் பணியாகச் செய்துமுடித்துள்ள செட்டி யாரின் பக்தி கோயிலில் விளங்கித் தோன்றுகிறது. இராஜகோபுரம், புறமதில்கள் புதியதாகத் திருப்பணிசெய்யத் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

திருக்குளம் நாற்புறமும் கருங்கல்லால் சுற்றுச்சுவர் எடுக்கப் பெற்று அழகுறத்திகழ்கிறது. ஊர்மக்கள் பலரும் நீராடும் குளமாகவும் விளங்குகிறது.

இராஜகோபுர நிலைவாயிலைக்கடந்து கோயிலுக்குள் நுழைந்தால் அழகியமுன்மண்டபம் நம்மைவரவேற்கும். தூண்களில் திருக்கோயில் திருப்பணியைச் செய்துமுடித்த செட்டியார் அவர்தம் துணைவியார் உருவங்கள் இறைவனைக் கைகுவித்து வணங்கும்நிலையில் செதுக்கப் பெற்றுள்ளன. அவர்களின் எதிரே, இடபாரூடர் திருவுருவமும், சமயாசாரியர் உருவமும் உள்ளன. விபூதிநிரப்பிய திருநீற்றுக்கோயில் நமக்குத் திருநீறு அளிக்கிறது.

கோயிலின் வாயிலில் கருங்கல்லாலான துவஜஸ்தம்பமும், நந்தி பலிபீடங்களும் உள்ளன. அதையடுத்து, தெற்குநோக்கிய சந்நிதியை யுடைய அம்பாள் கோயிலும் அதற்கு அருகில் திருமுறைக் கோயிலும் உள்ளன. திருக்கோயில்களில் திருமுறைகளுக்கு இடமளித்து அவற்றிற்குக் கற்கோயில் அமைத்த செட்டியாரின் திருமுறைபக்தியை நாம் பாராட்டுகிறோம்.

திருமுறைக்கோயிலில் பட்டுக்கட்டடத்திலான தேவாரத்திரு முறைகள் வைக்கப்பட்டுள்ளன. முதற்பிராகாரத்தை வலம் வந்து இரண்டாவது வாயிலுக்குள் நுழைகிறோம். வாயிலில் விநாயகர் முருகன் திருவுருவங்கள் உள்ளன. முதற் பிராகாரத்தை அடைந்து திருக்கோயிலை வலம்வருகிறோம். திருமாளிகைப் பத்தியில் கிழக்கே சூரியன், பதினாறுபட்டைகளில் சிவலிங்கம்; மேற்கே கன்னிமூலையில் விநாயகர், சிவலிங்கம்; அதையடுத்து சித்திவிநாயகர், முருகன், கஜலக்ஷ்மி ஆகியோரும் வடக்கே நடராஜர், பைரவர்; கிழக்கே ஈசான மூலையில் நவக்கிரகங்கள் அதையடுத்து மகாலிங்கம், அம்பாள், சந்திரன் ஆகியோரும் எழுந்தருளுவிக்கப்பெற்றுள்ளனர். கர்ப்பக் கிருகக் கோஷ்டங்களில் தெற்கே தக்ஷிணாமூர்த்தி, மேற்கே இலிங்கோற்பவர், வடக்கே பிரமன் துர்க்கை ஆகியோரும், தனிக் கோயிலில் சண்டேசுவரரும் விளங்குகின்றனர். வலம்வந்து மகாமண்ட பத்தைக்கடந்து வாயிலிலுள்ள விநாயகரை வழிபட்டு அர்த்த மண்டபத்திற்குள் நுழைகிறோம். உள்ளே உற்சவவிக்கிரகங்கள் பஞ்ச மூர்த்திகள், சந்திரசேகரர், கிராம தேவதைகள் ஆகிய தெய்வத் திருமேனிகள் பாதுகாப்பாக எழுந்தருளுவிக்கப் பெற்றுள்ளனர்.

மூலலிங்கமாகிய வசிஷ்டேஸ்வரரைத் திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பதிகத்தை ஓதி வழிபடுகின்றோம். இலிங்கபாணம் சுயம்புலிங்கமாகத் * தானே தோன்றியதை மெய்ப்பிக்கும்வகையில் நான்குபட்டைகளுடன் விளங்குகிறது. பிரமரந்திரத் துளைவழியே கங்கைநீர் சிவலிங்கத்தின் திருமுடி மீது சொட்டிக்கொண்டிருக்கிறது. எப்படித் தண்ணீர் சொட்டுகின்றது என்பதை அறியமுடியாத வியப்பாக இது நிகழ்ந்து வருகிறது என்பதை அறியமுடியவில்லை. வழிபட்டு வெளியில் வந்து அம்பாள் அருள்மிகு உலகநாயகியை வழிபடுகின்றோம். பன்னெடுங்காலமாக விளங்கிவருகின்ற இத்திருக் கோயில் புதுப் பொலிவோடு திகழ்வதை எண்ணி வாழ்த்திவணங்கி விரைவில் இராஜகோபுரத் திருப்பணியும் புறமதில் திருப்பணியும் நிறைவெய்தி மகாகும்பாபிஷேகம் நடைபெறும்நாளை எதிர்பார்த்துப் பெருமானிடம் விடைகொள்கிறோம்.

இறைவன் திருக்கோயிலைக் கருங்கல்லால் புதுக்கியோர் பெறும்பயனைத் தெரிவிக்கும்,

புல்லினால் கோடியாண்டு, புதுமண்ணால் பத்துக்கோடி
செல்லுமா ஞாலத்தன்னில் செங்கல்லால் நூறுகோடி
அல்லியங் கோதைகேளாய் ஆலயம் மடங்கள் தம்மைக்
கல்லினால் செய்வித்தோர்கள் கயிலைவிட்டு அகலாரன்றே.

என்ற பாடல் நம் நினைவுக்கு வருகிறது. செட்டியார் சிவபக்தியில் சிறந்தவராய் இத்தலத்தில் தங்கி ஆற்றிய சமயப்பணிகளை அன்பர்கள் சொல்லக்கேட்டுப் பெருவியப்புடன் வெளியில்வருகின்றோம்.

**கல்வெட்டுக்கள் :**

இவ்வூர்க்கோயிலைத் திருப்பணி செய்வதற்கு முன்பிருந்த கல்வெட்டுக்கள் அரசியலாரால் படியெடுக்கப்பட்டுள்ளன. பாண்டியர்களில் மாறவர்மன் திரிபுவனசக்ரவர்த்தி குலசேகரதேவர் காலத்திலும், சாளுவபரம்பரையில் நரசிம்மராயன் காலத்திலும் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுக்கள் இருந்தன. கல்வெட்டு அறிக்கை இறைவன் பெயரைத் தேறனூர் எனக் குறித்துள்ளது. கருப்பக்கிருகத்தின் எதிரில் உள்ள மண்டபம் எதிரிலாவீரர், சத்துருகாலர் எனப் பாராட்டப் பெற்றவரும் பெருங்கோனூர் குலோத்துங்க சோழீச்சரமுடைய நாயனூர் கோயிலின் பணியாளருமாகிய ஒருவரால் கட்டப்பெற்றதாகஇருந்தது. அம்மண்டபத்தின் சுவர் சேதிராயரின் திருப்பணியை உடையது. அம்பாள்கோயில் கல்வெட்டு, நாச்சியார் கோயிலை முதலியப்ப முதலியார் பழுதுபார்த்ததைக் குறிப்பிடுகிறது.

அவனிராமன் என்பவன் இவ்வூர் இறைவர்க்குத் தான் பிறந்த நட்சத்திரமாகிய ஆனி உத்திரட்டாதியில் வழிபாடு செய்வித்தற்குக் கண்டியூர்நாட்டில் குறிப்பிட்ட சில இடங்களில் ஐந்துவேலி நிலம் கொடுத்துள்ளான். பெருங்கோனூர் ஊரவர் தங்கள் பாடிகாவல்வரியை இக்கோயிலைப் பழுதுபார்ப்பதற்குக் கொடுத்துள்ளனர்.

## 2. திருப்புள்ளமங்கை

இத்தலம் கும்பகோணம் தஞ்சாவூர் இருப்புப்பாதையில் பசுபதி கோயில் புகைவண்டிநிலையத்திலிருந்து வடமேற்கே 3 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. தஞ்சாவூரிலிருந்து 14 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. கும்பகோணத்திலிருந்து தஞ்சை செல்லும் பேருந்துச் சாலையில் பசுபதிகோயில் மாதாகோயிலில் இறங்கி வடமேற்கே ஒரு கிலோமீட்டர்தூரம் கண்டியூர் செல்லும் பேருந்துச்சாலையில் சென்றால் கோயிலை அடையலாம்.

பண்டைக்காலத்தில் ஊர்ப்பெயர் புள்ளமங்கை எனவும், கோயிற்பெயர் ஆலந்துறை எனவும் வழங்கப்பெற்றது என்பதை " புள்ளமங்கை ஆதியவர்கோயில் திருவாலந்துறை தொழுமின் ", என்ற திருப்பதிகப்பாடல் வரிகளால் அறியலாம். கல்வெட்டுக்களில் திருவாலந்துறை மகாதேவர்கோயில் என இக்கோயில் குறிப்பிடப் படுகிறது. இன்று பசுபதிகோயில் என்று வழங்கப்படுகிறது. பெரிய கிராமம். கோயில் இருக்குமிடம் வேளாளர்வாழும் ஊர்ப்பகுதியாக இருத்தலால் வெள்ளாளப் பசுபதிகோயில் என அழைக்கப்பெறுகிறது.

குடமுருட்டி ஆற்றின்கரையில் திருகோயில் உள்ளது. ஆற்றின் கரையில் விளங்கும் தலங்கள் பலவும் துறை என்ற பெயரை உடை

யதாய் வழங்கப்படுதற்கேற்ப இத்தலம் ஆலமரத்தைத் தலமாகக் கொண்டு விளங்கியதாக இருந்தமையால் ஆலந்துறை என வழங்கப் பெற்றதாதல்வேண்டும்.

தேவர்கள் அமுதம் கடைந்தபோது உண்டான விடத்தை இறைவன் அமுது செய்தஇடம் ஆதலின் ஆலந்துறை எனப்பெற்றது எனத் தலபுராணம் கூறும்.

புள் - கழுகு. கழுகு பூசித்த தலமாதலால் புள்ளமங்கை எனப் பெற்றது. மங்கலம் மங்கை எனத் திரிந்துநின்றது. புள்ளிருக்கு வேளூர் என்ற தலப்பெயரிலும் புள் கழுகு எனப்பொருள்படுதலைக் காணலாம். புள்ளமங்கை என்பதற்கேற்பக் கோபுரத்தில் எப்பொழுதும் கழுகுகள் வசித்துவருகின்றன. திருஞானசம்பந்தர் இத்தலத் திருப்பதிகத்தின் திருக்கடைக்காப்பில் ‘பொந்தின்னிடைதேனூறிய’ என்று அருளியதற்கு ஏற்பக் கோயிலின் சாளரத்தில் தேனடை இருந்துகொண்டே இருக்கிறது.

திருச்சக்கரப்பள்ளியின் சப்தஸ்தானத் திருத்தலங்களில் இதுவும் ஒன்றாகும்.

**கோயிலமைப்பு :**

பசுபதிகோயில் மிகப்பெரிய கிராமம். இக்கிராமத்தில் பல்வேறு குடிமக்கள் வாழ்கிறார்கள். வேளாளர் வாழும் பகுதி வெள்ளாளப் பசுபதிகோயிலில் என்றும், கள்ளர்கள் வாழும் பகுதி கள்ளப்பசுபதி கோயில் என்றும் இவ்வாறு பல பிரிவுகளில் ஊர் வழங்கப்படுகிறது. அக்காலத்தில் ஊர் புள்ளமங்கை எனவும், கோயில் ஆலந்துறை எனவும் வழங்கப்பெற்றது. பசுபதிகோயிலின் மேற்கு எல்லையில் புள்ளமங்கைக்கோயில் உள்ளது. சோழர்காலச் சிற்பச்சிறப்புக்களோடு கூடிய பழமையான இக்கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. மூன்று நிலைகளோடு கூடிய இராஜகோபுரம் கோயிலுக்கு அழகுசெய்கிறது. எதிரே திருக்குளம் உள்ளது.

இராஜகோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றால் பெரிய முன் மண்டபம் நம்மை வரவேற்கிறது. இம்மண்டபத்தின் வடபுறம் அம்பாள் சந்நிதி தெற்குநோக்கி விளங்குகிறது.

திருஞானசம்பந்தரின் திருப்பதிகம் இம்மண்டபத்தில் சலவைக் கல்லில் பொறித்துப் பதிக்கப்பட்டுள்ளது. ஒருமுறை ஓதி அவர் அருளிய இயற்கைக் காட்சிகள் இன்றளவும் மாறாமல் இருக்கும் அற்புதத்தைவியந்து திருக்கோயிலை வலம்வருகிறோம்.

மேற்குப்பிராகாரத்தில் நின்றதிருக்கோலத்தில் விநாயகர், வள்ளி தெய்வயானையுடன் முருகன் விளங்குகின்றனர். கர்ப்பக்கிருகத்தைச் சூழ அகழ் விளங்குகிறது. கர்ப்பக்கிருகம் மிகமிக அழகிய கருங்கல் வேலைப்பாடுகளுடன் திகழ்கிறது. சோழர்காலக் கலைப்பாணி கர்ப்பக் கிருகத்தில் ஒவ்வோர் பகுதியிலும் விளங்கித் தோன்றுகிறது. இராமாயண வரலாற்றுச் சிற்பங்கள் பலவும் நுண்ணிய வேலைப்பாடு களுடன் செதுக்கப்பெற்றுள்ளன. தென்புறம் விநாயகர், தக்ஷிணா மூர்த்தி திருவுருவங்கள் அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் உள்ளன. பழைய தக்ஷிணாமூர்த்தி திருவுருவம் சிதிலம் அடைந்துள்ளமையால் புதிய தக்ஷிணாமூர்த்தி உருவம் எழுந்தருளுவிக்கப்பெற்றுள்ளது. மேற்கே உள்ள மையக்கோஷ்டத்தில் திருமால் பிரமர் காணமுடியாத படி பெருமான் அழகுருவாய் எழுந்தருளிய இலிங்கோற்பவர் விளங்கு கிறார். அருகில் நான்முகனும், திருமாலும் நிற்கின்றனர். இருபுறமும் திருமால் பிரமர் திருவுருவங்களுடன் இலிங்கோற்பவர் விளங்குவதை வேறெங்கும் காண்டல் அரிது. வடபுறம் நான்முகன் திருவுரு விளங்கு கிறது.

வடக்குப் பிராகாரத்தில் விளங்கும் பழமையான மகிடாசுர மர்த்தனி திருவுருவம் இத்திருக்கோயிலுக்குத் தனிச்சிறப்புத்தருகின்ற மூர்த்தி. கருங்கற் குடைநிழலில் எருமைத் தலையில் சங்கு சக்கரங்களை ஏந்தியநிலையில் திரிபங்கியாய் துர்க்காம்பிகை விளங்கும் அழகிய தோற்றத்தைக்கண்டு நம்மை நாம் மறப்போம். இருபுறங்களிலும் அம்மையின் வாகனங்களாகிய கலைமான், சிங்கம் இரண்டும் உள்ளன. வீரர்கள் இருவர் கூரியகத்திகளால் அம்மையின் சந்நிதியில் தலையை அரிந்து தருவது போலவும், தொடையைக்கீறி இரத்தபலிதருவது போலவும் காணப்படுகின்றனர்.

அருகில் சண்டேசர் திருக்கோயில். வலம்வந்து மகாமண்டபத்தை அடைகிறோம். முன்னால் நவக்கிரகங்கள் உள்ளனர். நடுவில் நந்தி தேவர் உள்ளார். மண்டபத்தின் தென்புறம் நால்வர் சந்நிதி உள்ளது.

வாயிலில் உள்ள விநாயகரை வணங்கி ஸ்நபன மண்டபத்தை அடைகிறோம். இங்குள்ள துவாரபாலகர்கள் திருவுருவங்கள் சோழர் கால கலைப்பாணியோடு திகழ்கிறது.

அர்த்தமண்டபத்தில் நான்கு பெரிய தூண்கள் சோழர்காலக் கலைப்பாணியோடு திகழ்கிறது. இக்கோயிலின் கருவறையும் அர்த்த மண்டபமும் முதற்பராந்தகன் (கி. பி. 907-955) காலத்துத் திருப் பணிகளைப் பெற்றுள்ளன.

முழுவதும் கருங்கற் பணியாலான இத்திருக்கோயிலில் கர்ப்பக் கிருக விமானம் பிற்காலத்தில் சுதையால் புதுப்பிக்கப்பெற்றுள்ளது.

நடராஜர் மற்றும் உற்சவமூர்த்திகள் இங்குப் பாதுகாப்பாக வைக்கப் பெற்றுள்ளன. மூலலிங்கம் பெரிய திருவுருவம்; உருண்டை வடிவம். வெளியில் அம்பாள் சந்நிதியை அடைகிறோம். சௌந்தரநாயகி என்ற பெயருக்கு ஏற்றவாறு அழகுக்கு ஒருவரும் ஒவ்வாதவளாய் அம்பிகை திகழ்கிறாள்.

**மூர்த்திகள்:**

இறைவன் திருப்பெயர் அருள்மிகு ஆலந்துறைநாதர். பிரமன் பூசித்த தலமாதலின் பிரமபுரீஸ்வரர் எனவும் பெயர்பெறுவர். பசுபதி நாதர் எனவும் வழங்கப்பெறுகிறார். அம்பாள் திருப்பெயர் அருள்மிகு அல்லியங்கோதை. இத்தலத்தில் விளங்கும் துர்க்கை மிகப் பழமையும் சிற்பக் கலைச் சிறப்பும் உடைய மூர்த்தியாகும். அன்பர்கள் பலர்க்கும் அருள்வழங்கிவரும் இவ்வம்மையைத்தரிசித்தல் அவசியம்.

**கல்வெட்டுக்கள் :**

சோழர்காலத் திருப்பணிகளில் பழமையும் கலைச்சிறப்பும் பெற்றுள்ள இத்திருக்கோயிலில் பல கல்வெட்டுக்கள் உள்ளன. முதற் பராந்தகசோழரின் மூன்றும் ஆண்டுக் கல்வெட்டொன்று அக்கிராமச் சபையார் திருவாலந்துறை மகாதேவர் கோயிலின் முன்மண்டபத்தில் கூடி நல்லூச்சேரி காலபிடாரிகோயிலுக்கு 1½ மா நிலத்தை 25 கழஞ்சு பொன்கொண்டு விற்றுக்கொடுத்தசெய்தியைக் கூறுகிறது. ஆருவது ஆண்டுக் கல்வெட்டு இக்கோயிற் பெருமானுடைய காலைவழிபாட்டுச் செலவினங்களுக்காகச் செம்பியன்மாவலி வாணராயன் என்பான் ஒரு நிலத்தை மானியம் விட்டசெய்தியைக் கூறுகிறது. பதினேழாம் ஆண்டுக் கல்வெட்டு விளக்கிற்காக ஒருவர் வழங்கிய நன்கொடை பற்றியும், பன்னிரண்டாம் ஆண்டுக் கல்வெட்டு அரசர் இக்கோயிலுக்கு 5½ வேலி நிலமும், 5 கழஞ்சு பொன்னும் வழங்கிய செய்தியையும் கூறுகிறது.

இரண்டாம் ஆதித்தசோழனின் ஐந்தாம் ஆண்டுக் கல்வெட்டும், சுந்தரசோழன் காலத்து 15 ஆம் ஆண்டுக் கல்வெட்டும் விளக்கெரிப்பதற்கு வழங்கிய நன்கொடைகளைக் கூறுகின்றன.

முதல் இராசராசனுடைய பன்னிரண்டாம் ஆண்டுக் கல்வெட்டு இப்புள்ளமங்கை ஊர்ச்சபையார் முரசறைந்து ஒன்றுகூடி இருக்கு சாம வேதங்களில்வல்ல அந்தணர்கட்கு மானியம்விட்ட செய்தியைக் கூறுகிறது.

விக்கிரமசோழனின் 9 ஆம் ஆண்டுக் கல்வெட்டில் ஒரு குற்ற விசாரணை கூறப்பட்டுள்ளது. கோயிலில் பணிசெய்த மெய்காவற்

காரர்களுக்குள் ஏற்பட்ட பூசலில் ஒருவருடைய புதல்வன் கொல்லப் படவே கொலைக்குக் காரணமாக இருந்தவர்கள் இறந்தவனுடைய பெயரால் கோயிலில் ஒரு நந்தாவிளக்கு இடுமாறு உத்தரவிடப்பட்ட செய்தியை இக்கல்வெட்டு வெளியிடுகிறது.

மூன்றும் குலோத்துங்கனுடைய கல்வெட்டொன்று கோயில் நிலங்கள் சிலவற்றுக்கு இறை இழிச்சிய செய்தியைக் கூறுகிறது.

## 3. திருச்சக்கரப்பள்ளி

இத்தலம் கும்பகோணத்திலிருந்து தஞ்சாவூர் செல்லும் இருப்புப் பாதையில் ஐயன்பேட்டை புகைவண்டி நிலையத்திற்கு மேற்கே 2 கி. மீட்டர் தூரத்தில் இருக்கிறது. கும்பகோணத்திலிருந்து தஞ்சாவூர் செல்லும் பேருந்துச்சாலையில் ஐயன்பேட்டை பேருந்து நிலையத்தில் இறங்கினால் திருக்கோயிலை எளிதில் அடையலாம். இத்திருத்தலம் சுவாமிமலை தேவஸ்தானத்தோடு இணைக்கப்பெற்று இந்து சமய அற நிலையத் துறையினரால் பரிபாலிக்கப்படுகிறது. சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களில் பதினேழாவது தலமாக எண்ணப்படுவது. திருமால் வழிபட்டுச் சக்கராயுதம்பெற்ற தலம் ஆதலால் சக்கரப்பள்ளி எனப் பெயர்பெற்றது. பள்ளி - கோயில்.

" வண்சக்கிரம்மால் உறைப்பால் அடிபோற்றக் கொடுத்தபள்ளி" என்பது இத்தலபுராண வரலாற்றை உறுதிப்படுத்தும். சக்கரவாளப் பறவை வழிபட்டு அருள்பெற்றதால் இத்தலம் சக்கரப்பள்ளி என்றும், இறைவன் சக்கரவாகேஸ்வரர் என்றும் வழங்கப்பெற்றனர் என்றும் கூறுவர்.

திருச்சக்கரப்பள்ளியைத் தலைமைத் தலமாகக்கொண்டு ஏழு சப்தஸ்தானத் தலங்கள் கூறப்படுகின்றன. திருச்சக்கரப்பள்ளியுடன் அரிமங்கை, சூலமங்கை, நந்திமங்கை, பசுபதிமங்கை, தாழைமங்கை, புள்ளமங்கை ஆகிய மங்கை என்னும் பெயருடைய ஆறுதலங்களை யும் இணைக்கும் ஏழூர் விழா ஆண்டுதோறும் பங்குனிமாதத்தில் நிகழ்கின்றது.

திருச்சக்கரப்பள்ளி இறைவர் இவ்வூர்களுக்கு எழுந்தருளுவார். அவ்வத்தலங்களிலுமுள்ள இறைவர் உடன்வர ஏழூர்மூர்த்திகளும் உலாவரும் இவ்வினிய விழா இத்தலத்திற்குரிய சிறப்பு விழாவாகும்.

இந்திரன் மகன் சயந்தனும் தேவர்கள் முதலியோரும் பூசித்துப் பேறுபெற்றுள்ளனர்.

இத்தலம் சிவரகசியம், பிரமகைவர்த்த புராணம் இலிங்க புராணம் முதலியவற்றுள் சிறப்பாகப் பாராட்டியுள்ள ஏழுதலங்களுள் ஒன்று எனக்கூறுவர். ஏழு மேற்கூறிய சக்கரப்பள்ளி முதலியனவாம். இவ்வேழும் முறையே பிராமி, மாகேஸ்வரி, கௌமாரி, வைணவி, வாராகி, மாகேந்திரி, சாமுண்டி என்னும் ஏழு மங்கையர்களால் பூசிக்கப்பெற்றதனுல் சப்த மங்களத்தலங்கள் என்று வழங்கப்பெறும். நாதசர்மா தமது மனைவி அனவித்யாதேவியுடன் நியமமாகத்தேவகாத தீர்த்தத்தில்மூழ்கி இவ்வேழு பதிகளையும் வழிபட்டுப் பேறுபெற்றனர் என்பர்.

பழுதடைந்திருந்த இத்திருக்கோயில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகளால் திருப்பணி செய்யப்பெற்றுள்ளது. சைவவுலகம் விழிப்புணர்வோடு காத்துவருதற்குரிய தலமாக இருந்துவருகிறது.

**கோயிலமைப்பு :**

கும்பகோணம் தஞ்சை செல்லும் பேருந்துசாலையின் தென்புறம் சக்கரப்பள்ளி திருக்கோயில் விளங்குகிறது. இன்று இக்கிராமம் மகமதியர்களின் குடியிருப்பாக மாறியுள்ளது. மகமதியர்களின் வீடுகளே இன்று கோயிலைச் சூழ்ந்துள்ளன.

திருக்குளத்தை அடுத்துத் திருக்கோயில் அமைந்துள்ளது. கிழக்குநோக்கிய சந்நிதி. கட்டைக் கோபுரத்தைக்கடந்து உள்ளே சென்றதும் பெரியபிராகாரம். முதலில் அம்பாள்கோயில் தெற்குநோக்கி விளங்குகிறது.

நந்தி பலிபீடங்களை அடுத்து அம்பாள் மண்டபத்தைக் கடந்து கோயிலை வலம்வருகிறோம். தென்னைகளும் நந்தவனமும் கோயிலுக்கு அமைதியும் அழகும் தருகின்றன. மேற்குப்பிராகாரத்தில் விநாயகர் முருகன் ஆகியோர்கோயில்கள் உள்ளன. கர்ப்பக்கிருகக்கோஷ்டங்களில் தெற்கே விநாயகர் தக்ஷிணமூர்த்தி, மேற்கே லிங்கோற்பவர், வடக்கே பிரமன் துர்க்கை ஆகியோர் உள்ளனர்.

மகாமண்டபத்தில் சூரியன், சந்திரன், பைரவர், நால்வர் முதலியோர் உள்ளனர். ஸ்நபன மண்டபத்தில் துவாரபாலகர் உள்ளனர். அர்த்தமண்டபத்தில் சோழர்காலக் கலைப்பாணிகளோடு கூடிய தூண்கள் உள்ளன.

அருள்மிகு சக்கரவாகேஸ்வரர் அழகிய திருக்கோலத்தோடு உயர்ந்து விளங்கித் தோன்றுகிறர். அம்பாள் அருள்மிகு தேவநாயகி

திருக்கோயில், கோபுரவாயிலை அடுத்துள்ளது. இக்கோயிலுக்குரிய உற்சவமூர்த்திகள் சுவாமிமலை திருக்கோயிலில் பாதுகாப்பிற்காக வைக்கப்பெற்றுள்ளன.

**மூர்த்திகள் :**

இறைவரின் திருப்பெயர் அருள்மிகு சக்கரவாகேசுவர். இறைவியின் திருப்பெயர் அருள்மிகு தேவநாயகி.

**கல்வெட்டுக்கள் :**

இக்கோயில் கல்வெட்டுக்களில் இவ்வூர் குலோத்துங்கசோழ வளநாட்டு விளநாட்டு இராசேந்திர சோழ சதுர்ப்பேதிமங்கலம் என்று குறிக்கப்பெற்றுள்ளது. மூன்றும் குலோத்துங்கசோழனின் 12 ஆவது ஆண்டுக் கல்வெட்டு இவ்வூர்ச்சபைக்குரிய சிலவிதிகளைத் தெரிவிக்கின்றன. 40 வயதுக்கு மேற்பட்டவரே ஊர்ச்சபை உறுப்பினராகவேண்டும் எனவும், அவர்களும் பத்து ஆண்டுக்குள் நிற்காதவராக இருக்கவேண்டுமென்றும் ஊர்ச்சபை விதிகள் கூறப்பட்டுள்ளன. முப்பதாம் ஆண்டுக் கல்வெட்டு நிலம் குத்தகைக்குவிடப்படுவதற்குச் சில விதிகளை உணர்த்துகின்றன.

## பார்வையாளர் குறிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

### சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம்.

கோவையில் அமைந்து சமய - சமுதாய சேவை செய்துவரும் தருமையாதீன ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் இறைபணி மன்ற அங்கத்தினர்களுடன் சீகாழி தல வழிபாடு 18—7—78 இரவு மிகச் சிறப்பாக நிகழ்ந்தது. இத்திருத்தல நிர்வாக அதிகாரிகளும் பணியாளர்களும் நம்திருக்கூட்டத்தினரை நன்கு உபசரித்து, தல விளக்க உரைகளைக்கூறி மக்களை மகிழ்ச்சிக்கடலில் திளைக்கச்செய்தனர். ஆதீனத் திருக்கோயில்களில் இதுவும் கண்ணாடிபோலச் சுத்தமாக-தெளிவாகப்பரிபாலிக்கப்படுகிறது. ஸ்ரீலஸ்ரீகுருமணியின் கருணை பரவுக.

R. சண்முகம், காப்பாளர்.  M. பாலசுப்பிரமணியன், அமைப்பாளர்.
சு. காளியப்பன் ,,

# கடவுளும் தெய்வங்களும்

திரு. கு. வைத்தியநாதன்,
துணை வணிகவரி அலுவலர், சென்னை - 1.

காளயுக்தி ஆண்டு ஆவணித்திங்கள் "ஞானசம்பந்தம்" இதழில் வெளியிடப்பெற்ற "ஜனாதிபதியின் தத்துவம்" என்ற கட்டுரையைப் படித்ததும் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்ற வள்ளுவத்தின் கருத்துக்கு ஒப்ப, நமது மதிப்புக்குரிய ஜனாதிபதி அவர்களின் பேச்சில் தென்பட்ட அரியகருத்தை எடுத்துக்காட்டாகக் கொண்டு, சைவசமயம் கூறும் கடவுளின் உண்மை நிலையைத் (சொரூப இலக்கணம்) தெளிவுபடுத்தியிருக்கும் அருமையை எண்ணி எண்ணி மகிழ்ந்தேன்.

கடவுளைச் சைவம், சிவம் என்கிறது. சிவபெருமானின் உண்மை நிலையைச் சிவஞான சித்தியாரின் ஆறும் சூத்திரம் விரித்துக் கூறுகின்றது. ஆயினும், சிவஞானசித்தியாரின் முதற் சூத்திரத்தின் இறுதிச் செய்யுள், சிவனது உண்மைநிலையைச் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் அருமை அனுபவித்துப் போற்றத்தக்கது.

"சிவன் அரு உருவும் அல்லன்; சித்தினோடு அசித்தும் அல்லன்;
பவம் முதல் தொழில்கள் ஒன்றும் பண்ணிடு வானும் அல்லன்;
தவம் முதல் யோக போகம் தரிப்பவன் அல்லன்; தானே
இவை பெற இயைந்தும் ஒன்றும் இயைந்திடா இயல்பினனே"

[பவம் - படைப்பு. படைத்தல், காத்தல் முதலிய தொழில்கள் ஒன்றும், சிவபெருமான் உண்மைநிலையில் செய்யவில்லை.]

இறைவனின் தன்னியல்பை - சொரூப இலக்கணத்தை விளக்கும் இச்செய்யுள், வேதாகமக் கருத்துக்களின் சாரம் என்றால் அது மிகையாகாது.

தத்துவாதீதனாகிய சைவ சமயக் கடவுள், யாதொரு செயலும் ஆற்றாதவனாக இருப்பினும், அவனைவிட்டுப்பிரிக்க இயலாத அவனது

ஆற்றலே (அருள் அல்லது சக்தி) அனைத்துச் செயல்களையும் நிகழ்த்துகின்றது என்பதை, அடுத்துவரும் சிவஞானசித்தியாரின் இரண்டாம் சூத்திரத்து நான்காம்அதிகரணத்தின் நான்காம் செய்யுள் தெளிவுற விளக்கும்.

"சத்திதான் நாதம், ஆதிதானாகும்; சிவமும் அந்தச்
சத்திதான் ஆதி யாகும்; தரும் வடிவு ஆன எல்லாம்
சத்தியும் சிவமும் ஆகும்; சத்திதான் சத்தனுக்கு ஓர்
சத்தியாம்; சத்தன் வேண்டின், எல்லாம் ஆம் சத்தி தானே"

குறிப்பு :- சத்தி - பெண்பால்; சத்தன் - ஆண்பால், சத்தி குணம்;
சத்தன் - அக்குணத்தை உடைய குணி.

இவ்வரிய செய்யுள், இறைவனது பொது இயல்பை - அருட்டன்மையை - எத்துணை அழகாக எடுத்தியம்புகிறது! இறைவனது கட்டளையை நிறைவேற்றுவன, இறைவனது அருளாகிய சத்தியும்-சக்தியின் பல்வேறு வடிவுடைய தெய்வங்களுமே என்பதை இச் செய்யுள் தெளிவுபடுத்துகிறது.

இந்து சமயத்தினர் பலகடவுள்களை வைத்திருக்கின்றனரே என்ற வேற்றுச் சமயத்தினரின் வினவுக்குச் சரியானவிடை பகர்வனவாக அமைந்துள்ள இவ்விரு செய்யுள்களும், கடவுள் ஒருவரே; அவர் தன் இயல்பால் யாதொரு செயலும் இல்லாதவரே; ஆயினும், அவர் தனது பொது இயல்பால் - அருளால் - எளிமை காரணமாக ஆன்மாக்களின் தகுதிக்கேற்பப் பல்வேறு வடிவங்களைக் கொள்ளுகிறார்; அவ்வடிவ பேதங்களே தெய்வங்கள் எனப்படும். அத்தெய்வங்கள் அனைத்தும், ஒரே கடவுளின் பல்வேறு வடிவங்களே தவிர வேறில்லை.

"ஜனாதிபதியின் தத்துவம்" என்ற கட்டுரையில், இக்கருத்து மிகமிக அழகாக எடுத்துக்காட்டுடன் தெளிவுபடுத்தப் பட்டிருக்கிறது.

நமது இந்திய அரசியல் நிர்ணயச் சட்டப்படி, குடியரசுத் தலைவரின் (ஜனாதிபதி) ஆணைப்படியே, அனைத்துச் சட்டங்களும் செயல்முறைக்கு வருகின்றன. அவரது ஆணையை நிறைவேற்றவே அரசு அலுவலர்கள் உள்ளனர். மாநிலங்களில் உள்ள ஆளுநர்களும் (கவர்னர்கள்) குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்டவர்களே; அவர்களும் குடியரசுத்தலைவரின் ஆணைக்கு உட்பட்டவர்களே. குடியரசுத்தலைவர் எந்தவித விருப்பும் வெறுப்பும் இல்லாதவர். அவருக்கு மக்கள் நலனைத்தவிர வேறு எதைப்பற்றியும் எக்கட்சியினரைப்பற்றியும் அக்கறை இல்லை.

குடியரசுத்தலைவரைச் சிவபெருமானுக்கு ஒப்பிடுவோமாயின், ஆளுநர்களை அனந்தேசுரர், சீகண்டருத்திரர் முதலியவர்களோடு ஒப்பிடலாம்; அரசு அலுவலர்களை அக்கினி, வருணன், வாயு, நவக் கிரஹங்களின் நாயகர்களான சூரியன், சந்திரன், புதன் முதலிய தெய்வங்களோடு ஒப்பிடலாம். இத்தகுதெய்வங்கள் வேறு; கடவுளது வடிவங்களாகிய தெய்வங்கள் வேறு என்பது, இந்த இடத்தில் நுணுகி அறியத்தக்கது.

அரசு அலுவலர்கள், குடியரசுத்தலைவரின் ஆணைக்குக் கட்டுப் பட்டுச் செயலாற்ற முடியுமேதவிர, அவர்கள் விருப்பத்திற்கு எதையும் செய்ய இயலாது. அதுபோல நவக்கிரஹ நாயகர்களும், அக்கினி, வருணன் முதலிய தெய்வங்களும் இறைவனால் வகுக்கப்பட்ட விதிப் பயனை உயிர்கள்மாட்டுச் செலுத்த முடியுமேதவிர, அதற்குப் புறம் பான தொரு விதிப்பயனை வழங்கும் உரிமை இத்தெய்வங்கட்குக் கிடையாது.

எனவேதான், நமது சைவ சமயம், வினைவலியிலிருந்து விடுபட வேண்டுமாயின், இறைவனையே வழிபடவேண்டும் என்றும், அலுவலாற்றுதற்கே உரிய இத்தெய்வங்களை வணங்கினால்மட்டும் போதும் - வழிபடத்தேவை இல்லை என்றும் விதந்து ஓதுகின்றது. வழிபாடு வேறு; வணக்கம் வேறு என்பதை நாம் ஒருவாறு புரிந்து கொள்ளவேண்டும்.

வழிபாடு என்பது இறைவனின் ஏதாவது ஒரு வடிவை அகத்தில் ஏற்றி, முழுக்கிட்டு, மலர் சொரிந்து அழகு தீட்டி, தூப தீபம் காட்டி, வேண்டுவன வெல்லாம் அவ்வடிவிடம் வேண்டுவதே யாகும். வேண்டுவனவற்றில் உலகியற் பொருள்களும் அடங்கும். இடைக்காலத்தில் அவ்வடிவை மாற்றவே கூடாது. வடிவங்களில் ஏற்றத்தாழ்வு கிடையாது.

வணக்கம் எனப்படுவது அக்கினி, வருணன் முதலிய மேலே கூறப்பட்ட தெய்வங்களைப் புறக்கணிக்காமல் அவர்கட்குப் பணிவு காட்டுவதுமட்டுமே. அத்தெய்வங்களிடம் எதுவும் வேண்டுவது கூடாது. வேண்டுவதால் பயனும் ஏற்படாது.

அமைச்சர்களையும் சட்டமன்ற உறுப்பினர்களையும் அடியார் பெருமக்களோடு ஒப்பிடலாம். அமைச்சர்களும் உறுப்பினர்களும் நமக்கு வேண்டுவனவற்றைச் சட்டமாக்க உதவுவதுபோல், அடியார் பெருமக்கள் (சீவன்முத்தர்கள்) நமக்கு வழிகாட்டிகளாக இருந்து, நாம் வேண்டுவனவற்றை இறைவனிடம் பரிந்துரை செய்து நமக்கு நல்விதியை நல்க உதவுகின்றார்கள்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்."

# சிவமூர்த்தங்கள்

"நஜன்"

(மலர் 37 இதழ் 9 பக்கம் 405 இன் தொடர்ச்சி)

## ஆலமுண்ட நீலகண்டன்

"பொங்கிநின் றெழுந்த கடல்நஞ்சினைப்
பங்கி உண்டதோர் தெய்வமுண்டோ சொலாய்."

எந்த நல்லகாரியத்திலும் கெடுதல் என்று ஒன்று இல்லாது போவ தில்லை. கெடுதல் என்று ஒன்று இருந்தால்தானே இது நல்லது என்று விளக்கம் தரமுடியும். பொதுக்காரியங்களில் நல்லதும் கெட்டதும் கலந்தேவரும். நல்லவைகளை ஏற்றுக்கொள்ள நான் நீ என்ற பலர் முன்வருவார்கள். ஆனல் கெட்டவைகளை ஏற்கவரு பவர்கள் ஒன்றிரண்டுபேர்கள் இருந்தாலே அதிகம்.

துர்வாச முனிவரின் சாபத்தால் இந்திரனின் ஐஸ்வரியமெல்லாம் மறைந்துவிடுகின்றன. அவன் தேவகுரு பிருகஸ்பதியின் ஆலோசனையின்பேரில் மீண்டும் ஐஸ்வர்யங்களைப் பெறவேண்டி அசுரர் களுடன் அமிர்தம் கடைந்தெடுக்க ஒப்பந்தம் செய்துகொள்கிருன். இதைப்பெற பாற்கடல் கடைந்தாகவேண்டும். மந்திரமலையை மத்தாகவும் வாசுகியைக் கயிருகவும்கொண்டு பாற்கடலைக் கடைந் தார்கள். சாகாமல் இருக்க வைக்கும் அமிர்தம் கிடைக்கும் என்ற ஆசையினுல் அசுரர்கள் இதில் ஒத்துழைத்தார்கள். இதில் கிடைத்த நல்ல பொருள்களையெல்லாம் ஆளுக்கு ஒன்ருக எடுத்துக்கொண் டார்கள். ஆனல் பொங்கிவரும் ஆலஹால விஷத்தைக்கண்டு அனைவரும் ஓடினர்.

அப்போது லோகசமாரக்ஷணையின்பொருட்டு சர்வசங்கபரித்தியாகம் செய்து சுடலையில் ஆடிக்கொண்டிருந்த சிவபெருமான் இந்த ஆல ஹால விஷத்தை உண்டார். தேவி உமை தடுத்ததால் அவ் விஷத்தைத் தன் கழுத்திலேயே (கண்டம்) நிறுத்திக்கொண்டார். இதனுல் இவருக்கு **நீலகண்டன்** என்ற பெயர் ஏற்பட்டது.

உலக நலத்தில் கருத்துடையவன், தன் சுயநலத்தை அறவே துறப்பான் என்பதற்கு சிவனின் இத்திருவிளையாடலே எடுத்துக் காட்டு.

இறைவன் கருணைகொண்டு இவ்விஷத்தை உண்டதால் யாவரும் பிழைத்தனர். இந்தப்பேருதவி செய்ததற்காக யாவரும் மெய்ம்மறந்து பரமசிவனைத் துதித்ததாக ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் (இவர் மகான் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் சகோதரியின் மகன். மதுரை நாயக்க மன்னர்களிடம் அமைச்சராக இருந்தவர்.) தன் "நீலகண்டவிஜய சம்பு" என்ற நூலில் குறிப்பிட்டிருக்கிருர். அவர் கூறியுள்ளதாவது :—

"சிவபெருமானே! நீர் விஷத்தை உண்டு லோகத்தைக் காப்பாற்றியதால்தானே மகாவிஷ்ணு இதைப் பரிபாலிக்கமுடிகிறது; பிரமனால் படைக்கமுடிகிறது. இந்திரன் முதலானவர்கள் திக்பாலர்களானுர்கள். வியாசர் முதலியவர்கள் சிரஞ்சீவிகளாயினர். இக்கொடிய விஷத்தை நீங்கள் உட்கொள்ளவில்லை என்ருல் தேவர்கள் ஆஹுதி பெறமுடியுமா? எல்லோருடைய வாழ்வும் நீ கொடுத்த பிச்சையல்லவா?" (சுலோகம். 38, 39).

சம்காரமூர்த்தியான சிவபெருமான் விஷத்தை உண்டு உலகை ஏன் காப்பாற்றவேண்டும்? தன் சம்காரத்தொழிலுக்கு விஷம் உதவுமல்லவா? இதற்கு விடை ஆதிசங்கரர் தன் "சௌந்தர்யலஹரி"யில் கூறுகிருர்.

இயற்கையிலேயே எல்லா உலகங்களையும் அழிப்பதையே தொழிலாகக்கொண்ட சிவபெருமான், உலகத்தைக் காப்பதற்காக விஷத்தை உண்டு அதைக் கழுத்தில் நிலைநிறுத்தி நீலகண்டனுனது கருணையே உருவான அம்பிகையின் சேர்க்கையால் (இடதுபாகமாக அம்பிகை இருப்பதால் இறைவன் மாதிருபாதியனுக விளங்குகிருன்). இதை மனத்தில்கொண்டுதான் ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் இக்காவியத்திற்கு "நீலகண்ட விஜயம்" என்ற பெயரைக் கொடுத்திருக்கிருர்.

இறைவன் உலகத்தைக் காப்பாற்ற இந்த அரியசெயலைச் செய்தது பிரதோஷவேளையில். இதனுல் இந்தப் பிரதோஷ காலம் இறைவனை நினைக்க மிகச் சிறந்த காலமாக விளங்கிவருகிறது. தேவர்கள் இந்தப் பிரதோஷவேளையில்தான் நந்திபெருமானின் உதவியைக் கொண்டு இறைவனை ஆபத்திலிருந்து காப்பாற்றும்படி வேண்டினர்.

துன்பம் வரும்போதுதான் இறைவனை நினைக்கும் எண்ணம் உண்டாகும். இன்பம் உண்டாகும்போது எல்லாம் நம்மாலேதான் நடக்கிறது என்ற அகந்தை ஏற்படும்.

இப்படி உதவிக்கு ஓடிவந்த தேவர்களிடம் இறைவன் " நீங்கள் என்னைக் கேட்டுக்கொண்டா அமிர்தம் கடைந்தீர்கள்" என்று கேட்க வில்லை. இதுவரை தன்னை நினைக்காமலிருந்தவர்கள் இப்பொழுதேனும் வந்தார்களே ! என்ற அருள் நினைவே அப்பெருமானுக்கு உண்டா யிற்று. இதனால் மனமிரங்கி விஷத்தை விழுங்கினான். அவனுடைய கருணைக்கும் பேராற்றலுக்கும் அடையாளமாக அந்த விஷம் அவன் இருங்களத்தில் ( பெரிய கழுத்தில் ) விளங்குகிறது. இதைச் சம்பந்தர்,

" ஒருங்கு அளிநீ இறைவா என்று உம்பர்கள் ஓலம் இடக்கண்டு
இருங்களம் ஆர விடத்தை இன்னமுது உண்ணிய ஈசன் "

என்று திருக்கற்குடிப் பதிகத்தில் குறிப்பிட்டார். (திருச்சிக்கு அருகில் உய்யக்கொண்டான் என்ற பெயரோடு உள்ள ஊரே திருக்கற்குடி.)

நஞ்சை உண்ட இறைவன் அந்த நஞ்சின் கொடுமையை நினைக்கவில்லை. " இது இந்தக் குழந்தைகளுக்கு நல்லறிவு கொளுத்திய பொருள் " என்று எண்ணியமையால் அதனை இனிய அமுதாகக் கொண்டான் ஈசன். முன்னே இனிய அமுதாக விஷத்தை இறைவன் உண்டமையால்தான் தேவர்கள் பின்னர் இனிய அமுதத்தை உண்ண முடிந்தது.

இப்படி விஷத்தை உண்டு சுருண்டு அம்பிகையின் மடியில் தலையை வைத்துப் படுத்துக்கொண்டுவிட்ட இடந்தான் ஆந்திரா - தமிழ்நாடு எல்லையில் ஊத்துக் கோட்டைக்கு அருகிலுள்ள சுருட்டப் பள்ளி. இறைவன் சுருண்டுபடுத்துவிட்டதால் சுருட்டப்பள்ளி என்ற பெயர் ஏற்பட்டதாம்.

இந்த ஆலயம் ஒன்றில்தான் சிவபெருமான் விஷ்ணுவைப்போல் படுத்துக் கொண்டு காட்சி அளிக்கிறார். இறைவன் பெயர் பள்ளி கொண்டீசர். இறைவி பெயர் மனோன்மணி. அம்பிகையின் தாலி பாக்கியந்தான் இறைவனைக் காத்ததாக மூகசங்கரர் என்பவர் தன் மூகபஞ்சசதியில் குறிப்பிடுகிறார்.

காசியில் அனுமத் கட்டத்திலுள்ள காமகோடீஸ்வரர் ஆலயத்திலும் இந்தப் பள்ளிகொண்டீஸ்வரர் இடம்பெற்றிருக்கிறார்.

அவினாசிக்கு அருகிலுள்ள காரமேடையில் நஞ்சுண்டேஸ்வரர் லிங்க ரூபத்தில் கோயில்கொண்டிருக்கிறார். மதில்சுவர்களில் அஷ்ட கஜங்கள் (எட்டு யானை முகங்கள்) காணப்படுகின்றன.

கர்நாடகத்தில் மைசூருக்குப் பத்து மைலில் நஞ்சன்கூடு தலத்தில் இறைவன் பெயர் நீலகண்டேஸ்வரர்.

கேரளத்தில் நீலகண்ட மகாதேவருக்குத் தனி ஆலயம் உள்ளது.

# இறைவா! உன் ஆலயத்தில்....

தினமலர் நிருபர்

அயோத்தி மாநகரை ஆண்ட சூரிய வம்சத்தில் தோன்றிய சிபிச் சக்ரவர்த்தியினுல் கட்டப்பட்ட ஒரு புராதனக்கோயில் திருச்சி மாவட்டத்தில் இருக்கிறது என்பது பலருக்குத் தெரிந்திருக்காது. திருச்சியிலிருந்து துறையூர்செல்லும் சாலையில் 12 மைல் தூரத்தில் இன்று 'திருவெள்ளறை' என்று அழைக்கப்படுகின்ற சுவேதகிரிதான் இந்தப் பெருமைக்குரிய ஸ்தலமாகும்.

108 வைணவ ஸ்தலங்களில் ஒன்ருன திருவெள்ளறை இராமாநுஜர் (உடையவர்) 12 வருடங்கள் வசித்துவந்த ஊராகும். நீலிகா வனம் என்னும் உத்தம க்ஷேத்திரம். உய்யக்கொண்டார் எங்களாழ்வான் ஆகியோர் பிறந்த அவதார ஸ்தலமாகும். பூமாதேவி, மார்க்கண்டேயர் ஆகியோருக்குப் பெருமாள் காட்சிதந்த இடமாகும்.

**கண்கொள்ளாக்காட்சி :**

புண்டரீகாக்ஷன் என்னும் செந்தாமரைக் கண்ணன் வடிவில் இங்குப் பெருமானின் நின்றதிருக்கோலம் கண்கொள்ளாக்காட்சி. இதிகாச புராண வரலாற்றுப் பின்னணிகொண்ட திருவெள்ளறை இன்றுங்கூட அழியாத தெய்வீகச் சின்னமாக ஒளிவீசி வருகிறது. இருண்டுகிடக்கும் இந்துக் கோயில்களின் வரிசையில் இதனைச் சேர்க்கமுடியாது என்ருலும், இந்தக் கோயிலுக்குச் சொந்தமாக உள்ள 1470ஏக்கர் நிலங்களும், ' இறைவா ! உன் ஆலயத்தில்......' கட்டுரைத்தொடரில் சுட்டிக்காட்டவேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்திவிட்டன. இந்தக்கோயிலில் தீபம் எரியவேண்டும் என்பதற்காகவே கோயிலைக்கட்டிய சிபிச்சக்ரவர்த்தி நிரந்தரமான சில ஏற்பாடுகளைச் செய்துவிட்டுப்போயிருக்கிருன். அதனுல் பூஜைகள் குறைவு இன்றி நடக்கின்றன. ஆனுல் கோயில் நிலங்களின் கதி என்ன ? என்ற கேள்விதான் கவலைக்குரிய பதிலாக நிற்கிறது.

திருவெள்ளறை ஸ்ரீ செந்தாமரைக்கண்ணன் ஆலயத்திற்குச் சொந்தமான 1470 ஏக்கர் நிலங்களைப்பற்றியும் அது சீரழியும் நிலை பற்றியும் அறிவதற்கு முன்னுல் ஆன்மீக உள்ளங்களுக்கு மனச்சாந்தியளிக்கும் இந்த ஆலயத்தின் சிறப்புக்களைப் பார்ப்போம்.

கி. பி. எட்டாம் நூற்றுண்டில் வாழ்ந்த திருமங்கையாழ்வார் ஆகியோர் இக்கோயிலைப் பாடியிருக்கிருர்கள். இந்த ஊரில் உள்ள 5 புண்ணிய தீர்த்தங்களில் கார்த்திகை ஞாயிற்றுக்கிழமைகளில் நீராடி, பகவானைத் தரிசித்தால் அடுத்த ஆண்டில் குழந்தைபிறக்கும் என்பது நெடுங்காலச் சிறப்பாகும். சக்கர தீர்த்தம் எனப்படும் 'ஸ்வஸ்திக் கிணறு' அபூர்வமான ஒரு படைப்பாகும். ஸ்வஸ்திக் வடிவத்தில் காணப்படும் இதுபோன்ற கிணறு வேறு எங்குமே காண முடியாது.

**அதிசயக் கிணறு :**

தொல்பொருள் துறையால் பாதுகாக்கப்பட்ட சின்னமாக அறிவிக்கப்பட்டிருக்கும் இந்தக்கிணறு மாப்பிடுகு பெருங்கிணறு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மன்னன் பல்லவன் தந்திவர்மன் எடுப்பித்தவன். ஆழம்பாக்கிழான் தம்பிகம்பன் அரையன்; திருத்தியமைக்கப்பட்ட காலம் போசள வீர ராமநாதன் காலம் கி. பி. 13 ஆம் நூற்றுண்டு. திருத்தியவன் குடந்தை வாணிகன் உய்ய நெறிகாட்டினுன். கல்வெட்டு ஒன்று செய்யுள் வடிவில் உள்ளது. மாப்பிடுகு என்பது மன்னனின் பட்டப்பெயராகும் என்று தொல்பொருள் துறையின் அறிவிப்புப் பலகையில் குறிப்பு காணப்படுகிறது. பார்க்கவேண்டிய அதிசயக் கிணறு இது.

2170 அடி நீளமும் 36 அடி உயரமும் உடைய நீண்டு உயர்ந்த மதில் சுவர், 5 பிராகாரங்கள், 18 புராணங்களை உணர்த்தும் 18 படிகளுடன் பிரமாண்டமாக உயர்ந்து நிற்கும் ராஜகோபுரம். ஸ்ரீரங்கம் திருப்பைஞ்ஞீலி கோவில்களின் ராயகோபுரம்போல் கட்டப்பட்டுள்ள ராயர்காலக்கோபுரம். சிறியகுன்றைச் சிதைத்துக் கோயிலாகக்கட்டி, சுற்றிலும் கோட்டையைப்போல் மதில் எழுப்பியிருக்கும் பாங்கு. பால் வெண்மைக் கற்களினுல் ஓங்காரவடிவில் அமைக்கப்பட்டு ஒளி வீசும் ஆலயம். காயத்ரி கணக்கில் 24 படிகளுக்குமேல் ஜீவநிலையில் ஜொலிக்கின்ற ஸ்ரீ புண்டரீகாக்ஷப்பெருமாளின் தோற்றம்.

மூலஸ்தானத்தில் பெருமாளுக்கு வலது புறம் உயரத்தில் சாமரத்துடன் சூரியன், இடதுபுறத்தில் சந்திரன், வலதுபுறம் கருடன் கைகூப்பி நிற்கும் திருக்கோலம், வலதுபுறம் கைகூப்பி அமர்ந்திருக்கும் மார்க்கண்டேயன், இடதுபுறம் மனிதரூபத்தில் வணங்கிநிற்கும் ஆதிசேஷன், அதையொட்டி கைகூப்பியவாறு வீற்றிருக்கும் பூமாதேவி. இத்தனைக்கும் மத்தியில் ஸ்ரீ செந்தாமரைக்கண்ணனின் எழில்மிகு கோலம். ஆலயத்தின் உச்சியில் "விமலா கிருதி" என்னும் கீர்த்தி மிக்க விமானம்.

**வசந்த மண்டபம்:**

4-வது பிராகாரத்தில் கோயிலின் பின்புறம் 4 தூண்களுடன் ஒரு ஹால். இரண்டு சிறிய அறைகளுடன் ஒரே பாறையில் குடையப் பட்டிருக்கும் பல்லவர் குகை. எதிரில் ஒருவசந்த மண்டபம். ஒரு முறை குரல் எழுப்பினால் 3 முறைஎதிரொலிக்கும் விநோதமான மதில் சுவர் அமைப்பு. இவைதான் திருவெள்ளறை திருக்கோயில். பக்தர்கள் மட்டுமல்ல, சுற்றுலாப் பயணிகளுங்கூடத் தேடிப்போய் பார்க்க வேண்டிய அற்புதமான கோயில்.

"ஆதிதிருவெள்ளறை அடுத்து திருப்பைஞ்ஞீலி, ஜோதி திரு வானைக்காவல் சொல்லிக் கட்டியது ஸ்ரீரங்கம்" என்பது ஆதிதொட்டு வழங்கிவரும் பழமொழியாகும்.

பொன்னும் பொருளும் உள்ள இந்து ஆலயங்களைக் கொள்ளை யடித்து நாசப்படுத்துவதை ஒருலட்சியமாகக் கொண்டிருந்த முகமதிய அரசரான ஹைதர்அலி இந்தக் கோயிலையும் கொள்ளையடித்துச் சென்றிருக்கலாம் என்று கருதப்படுவதற்கான சிற்சில ஆதாரங்கள் உள்ளன. இந்தக்கோயிலின் ராய கோபுரத்திற்கு இப்போதுள்ள கதவு மிகவும் சிறியதாக உள்ளது. கலைவேலைப்பாடு மிக்க உண்மையான கதவு மிகப் பெரியதாக இருந்திருக்கவேண்டுமென்று கருதப்படுகிறது. இந்தக் கதவுகளுக்குத் தீவைத்துக் கொளுத்திவிட்டு முகமதியர்கள் உள்ளே புகுந்திருக்கலாம். கதவு எரிந்ததால் ஏற்பட்ட தீக்கனல் காரணமாக ராயகோபுரத்தில் இருந்த மிகப்பெரிய நீளமான கற்க ளெல்லாம் விரிசல் ஏற்பட்ட நிலையில் இன்றும் இருக்கிறது.

**அரக்கர்களை அழிக்க:**

இந்தியாவின் தென் பகுதியில் அரக்கர்களால் மகரிஷிகளுக்குத் தொல்லை ஏற்பட்டு வருவதைக் கேள்விப்பட்டு அவ்வரக்கர்களை அழிக்க அயோத்தியிலிருந்து படையுடன் வந்த சிபிச் சக்கரவர்த்தி இங்கு இறைவனைக்காணும் பேறு பெறுகிறான். தசரத மன்னனுக்கு ஸ்ரீமந்நாராயணனே குமாரனாக (ஸ்ரீ ராமனாக) அவதரித்து அரக்கர்களை அழித்துத் தர்மத்தை நிலைநாட்டப் போகிறார்; அதனால் நீங்கள் அயோத்திக்குத் திரும்பிச் செல்லுங்கள் என்று இங்குச் சிபிச்சக்கர வர்த்திக்கு மார்க்கண்டேய முனிவர் உபதேசிக்கிறார். பின்னர் மார்க்கண்டேயர் உபதேசத்தின்படி சிபிச்சக்கரவர்த்தி இக்கோயிலை எழுப்பி, பூஜைகள் குறைவின்றி நடைபெற அயோத்திலிருந்து 3700 பிராமணர்களைக் கொண்டுவந்து குடியேற்றினான். இதனால்தான் தில்லை மூவாயிரம் திருவெள்ளறை 3700 என்று இன்றுங்கூடச் சிறப் பிக்கப்படுகிறது.

சுவேதகிரி நாதன் எப்போதும் கல்பகோடி வருடங்கள் குன்றின் மேல் விளக்காக நின்று பிரகாசித்துக் கொண்டிருக்கவேண்டும் என்பதற்காகப் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை (ஏராளமான கிராமங்களை)ச் சேவை மானியமாக எழுதிவைத்துவிட்டு அயோத்தி போய்ச்சேர்ந்தார் சிபிச்சக்கரவர்த்தி.

திருவெள்ளறை கோயிலைச் சுற்றிலும் வாழ்ந்துவந்த 3700 பிராமணர்களும் காலப்போக்கில் ஊரின் சிறப்பும் வளமும் குன்றிப் போனதால் பிழைப்புத் தேடிச் சென்று விட்டார்கள். அந்தவம்சத்தில் வந்த சிலர்மட்டும் இன்று இங்கே குடியிருந்து கோயிற்பணிகளைச் செய்துவருகிறார்கள்.

**சொத்து விபரம் :**

இந்தக்கோயிலின் பழமை வரலாறுகள் மங்கி மறைந்து வருவது போலவே கோவிலுக்குச் சொந்தமான சொத்துக்களைப் பற்றிய விவரமும், நிலங்கள் பற்றிய விவரங்களுங்கூட மறைந்து வருவதாகவே தெரிகிறது.

ஒரு காலத்தில் கோவிலுக்குச் சொந்தமாக இருந்த பல நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலங்கள் எப்படியோ தனிப்பட்டவர்களின் பட்டா நிலங்களாக மாற்றப்பட்டுவிட்டதாகக் கூறப்படுகிறது. மானியமாக விடப்பட்ட ஏராளமான நிலங்கள் விற்பனை செய்யப்பட்டுவிட்டதாகவும் கேள்விப்படுகிறோம்.

சுமார் 1470 ஏக்கர் நிலமிருக்கும் திருவெள்ளறை கோயிலுக்கு நிலத்தின்மூலம் கிடைக்கும் ஆண்டு வருமானம் சுமார் 6000 ரூபாய் தான் என்பதை நம்புவதற்கே கஷ்டமாக இருக்கிறது. இந்த 6000 ரூபாய்கூடச் சரியாக வசூல் ஆகிறதா ? என்றால் இல்லை என்றுதான் பதில். இந்தக் கோயிலின் மொத்த ஆண்டுவருமானம் 18000 ரூபாய் தான். ஆயிரக்கணக்கில் ஏக்கர் நிலமிருந்துங்கூடத் தனியாக ஒரு நிர்வாக அதிகாரியை நியமிக்க வழியில்லை. ஸ்ரீரங்கம் கோயிலின் கட்டுப்பாட்டில் இயங்கிவருகிறது. ஸ்ரீரங்கம் கோயிலின் மொத்த வருமானத்திலிருந்துதான் இத்திருவெள்ளறை கோயிலின் செலவு சரிக்கட்டப்படுகிறது.

திருவெள்ளறை கோயிலுக்கு ஆகும் செலவு ஆண்டுக்கு சுமார் 70,000 ரூபாய் ஆகும். வருமானமே சுமார் 18,000 ரூபாய்தான். 1470 ஏக்கர் நில மிருந்தும்கூட பூஜை நிர்வாகச் செலவுகளுக்குக் கூட மற்றைய கோயில்களிடம் கையேந்தும் அவல நிலையை யாரிடம் சொல்லுவது ? சிபிச்சக்கரவர்த்தியின் கனவு எப்படி நிறைவேறுகிறது பார்த்தீர்களா ?

கோயில் சொத்துக்களை வைத்திருப்பவர்கள் மனசாட்சியுடன் நெஞ்சில் கைவைத்துப் பார்க்கவேண்டும். கோயில் சொத்துக்களை நிர்வகிக்கிறவர்கள் (பாதுகாக்கும் பொறுப்பில் உள்ளவர்கள்) அவை எப்படிப் போனால் என்ன? நமது சொத்தா வீணாகிறது? என்கிற உணர்வினை விடுத்துக் கோயில் சொத்துக்கள் தேசத்தின் சொத்து- மக்களின் சொத்து - இந்துசமயத்தின் சொத்து என்னும் அக்கறையுடன் நடந்துகொள்ளவேண்டும்.

**கோவில் செலவு:**

திருவெள்ளறை கோயிலுக்குச் சொந்தமான 1470 ஏக்கர் நிலங்களும் 296 குத்தகைத்தாரர்களிடம் இருந்துவருகிறது. கோயில் நிலங்கள் பற்றிய ரெக்கார்டுகளில் 296 பேர்களின் பெயர் இருக்கின்றனவே தவிர உண்மையில் நிலங்கள் அவர்களிடந்தான் இருக்கிறதா? என்பது கேள்விக்குறிதான். நிலங்களை அனுமதியின்றி விற்றுவிட்டவர்களும், அடகு வைத்திருப்பவர்களும் பலர் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்தநிலங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் குத்தகை எவ்வளவு தெரியுமா? ஆண்டுக்கு ஏக்கருக்கு ஏழு ரூபாய்தான். நூற்றுக் கணக்கான நல்ல நன்செய் நிலங்கள், தோட்ட நிலங்கள் புன்செய் நிலங்கள் என்ற பெயரில் வருடத்திற்கு ஏழு ரூபாய் குத்தகைக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இந்தமாதிரி நிலங்களை வைத்து லட்சாதிபதிகளாக வாழ்ந்துவரும் சிலர்கூடச் சரியாகக் குத்தகை தருவதில்லை என்று கேள்விப்படுகிறோம்.

**சிப்பந்திகளுக்கு:**

இந்தக் கோயிலில் பணிபுரியும் ஆலயச் சிப்பந்திகளுக்கு 4 ஆண்டுகளுக்கு முன்பு அரசு கோயில் நிலங்களைப் பட்டா செய்து கொடுத்தது. ஆனால் அந்தப்பட்டா நிலங்களை முன்பு வைத்திருந்தவர்கள் யாரும் நிலத்தைவிட்டு வெளியேறவில்லை. பட்டாதாரருக்குச் சரியாகக் குத்தகையும் தருவதில்லை. பட்டா தங்களது பெயரில் இருக்கிற காரணத்தால் கோயில் சிப்பந்திகள் நிலத்திற்குக் கையிலிருந்து கிஸ்தி கட்டவேண்டியிருக்கிறது. யாரோ அனுபவிக்கிற கோயில் நிலங்களுக்கு பாவம் கோயில்சிப்பந்திகள் கிஸ்தி கட்ட வேண்டியிருக்கிறது. தி.மு.க. அரசு இவர்களுக்குச் செய்தது உபகாரமா? உபத்திரவமா? கோயில் ஊழியம் செய்வதற்காக ஆலயசிப்பந்திகளுக்கு விடப்பட்ட மானிய நிலங்களை வைத்து அனுபவித்து வருகின்றவர்களும் அவர்களுக்குக் குத்தகையைத் தருவதில்லை. இந்தக் கோயில் சிப்பந்திகளுக்குச் சம்பளம் எதுவும் கிடையாது. சம்பளத்திற்குப் பதிலாக விடப்பட்ட மானிய நிலங்களில் இருந்து குத்தகையும் வருவதில்லை. இவர்கள்

பிழைப்பிற்கு என்ன வழி? கோயிலுக்கு ஊழியம் புரியும் சிப்பந்திகளின் பரிதாபமான நிலைமையைப் பார்த்தீர்களா?

இப்போது நிர்வாகம் செய்கிற அதிகாரிகளைக் குறைபட்டுப் பயன் இல்லை. சட்டங்களும், முன்பு செயல்படுத்தப்பட்ட நடைமுறைகளும் இந்த நிலைமைக்குக் கொண்டுவந்து நிறுத்தியுள்ளன. எனவேதான் கோயில் நிலங்களைப்பற்றி அரசு முழுவதுமாக ஒரு ஆய்வு நடத்த வேண்டுமெனவும், பாசன வசதி, விளைச்சல், நிலத்தின் தன்மை ஆகியவற்றை மதிப்பிட்டு இவைகளின் அடிப்படையில் நியாயமான குத்தகைகளை அரசு நிர்ணயிக்க வேண்டுமெனவும், குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டத்திலிருந்தும், கடன் நிவாரணச் சட்டத்திலிருந்தும் கோயில் நிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்கச் சட்டத்தைத் திருத்த வேண்டுமெனவும் தினமலர் வலியுறுத்திவருகிறது.

நன்றி. — *தினமலர், 13—8—78.*

**சமயபுரம் ஆலயத்தில்**

தமிழ்நாடு அறநிலையத்துறை அமைச்சர்

## மாண்புமிகு R. M. வீரப்பன் அவர்கள்

**பேசியது**

இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்குத் தமிழ்நாட்டில்தான் அறுபதாயிரத்துக்கும் மேற்பட்ட திருக்கோவில்கள் இருக்கின்றன.

கோவில்நிலங்களைக் குத்தகைக்கு எடுத்தவர்கள் அதற்கான பணத்தைப் பாக்கி இல்லாமல் கட்டிவிடவேண்டும். ஆண்டவனுக்குத் துரோகம்செய்ய நினைப்பது பெற்றதாய்க்குத் துரோகம் செய்வதாக ஆகும்.

'கோவில்களுக்குக் குத்தகைகொடுக்காதே; என் கட்சிக்கு நன்கொடை கொடு' என்று சில அரசியல்வாதிகள் தஞ்சை மாவட்டத்தில் கூறிவருகிறார்கள்.

ஆனால் அதே நேரத்தில் தஞ்சை மாவட்டத்தில் பல கோவில்களில் விளக்கு ஏற்றகூட வழி இல்லாத நிலைமையை நாம் பார்க்கிறோம்.

ஆலயம் வளர்ந்தால்தான் கலைவளரும். தமிழ் வாழும். தமிழ்ப் பண்பு நிலைத்துநிற்கும்.

நன்றி. — *தினத்தந்தி 7—9—78.*

# வேண்டுகோள்!

## ஆலயத்திற்காக ஒரு கடிதம் எழுதுங்கள்

இந்து ஆலயங்கள் பெரும்பாலும் பூஜையில்லாமல், விளக்கு இல்லாமல் மூடிக்கிடக்கின்றன. ஆலயங்களுக்கு நம் முன்னவர்கள் அசையாப்பொருட்களாக நிலங்களை எழுதிவைத்தார்கள். அதிலிருந்து வரும் வருவாயைக்கொண்டு ஊழிதோர் ஊழி பூஜை, நைவேத்தியம், விளக்கு எரிக்க நிரந்தர ஏற்பாடுகள் செய்துவைத்தார்கள்.

இன்று ஆலய நிலங்களிலிருந்து குத்தகை வருமானம் வருவதில்லை. அரசாங்க சட்டத்தைக் காரணம்காட்டி, குத்தகை கொடுக்காமல் ஆலய நிலவருமானத்தைத் தனிப்பட்டவர்கள் பலர் அனுபவித்து வருகின்றார்கள்.

பழைய குத்தகை பாக்கி தள்ளுபடி செய்ததைச் சாக்காகவைத்து நடப்பு ஆண்டிற்கும் குத்தகை அளக்காவிட்டால் அடுத்த வருடம் இதுவும் தள்ளுபடி ஆகிவிடும் என்று ஆலயநிலத்தின் வருமானத்தை அடைந்து சுகம் கண்டவர்கள் கருதுகின்றார்கள்.

ஆலய நிலங்களை உழுபவர்களுக்குப் பட்டாசெய்துதர வேண்டுமென்று ஒரு சிலர் கூச்சல் எழுப்பித் தூண்டிவருகின்றார்கள்.

ஆலய நிலம் இன்று பொதுவுடைமையாக அரசாங்கத்தின் மேற்பார்வையில் இருந்துவருகிறது. இந்த நிலங்களைத் தனிப்பட்டவர்களுக்குப் பட்டாசெய்துகொடுப்பது நீதியல்ல ; நேர்மையல்ல ; தர்மமல்ல ; சம்பிரதாயமும் அல்ல.

ஆலயங்களுக்கு நிலவருமானம் இன்றியமையாதது. வருமானம் குறைவாக வந்தபோதும் மூலதனத்திற்குச் சேதமில்லை. அதனால் தான் முன்னவர்கள் ஆலயத்திற்கு நிலத்தைத் தானமாகவும், தர்மமாகவும் எழுதிவைத்தார்கள்.

ஆலய நிலங்களின் குத்தகை வசூலிக்க அரசாங்க சட்டங்கள் எதுவும் தடையாக இருக்கக்கூடாது. ஆலய கட்டிடங்களுக்குச் சலுகை தந்ததுபோல நில வருமானத்திற்கும் சலுகை தந்து உதவ வேண்டுமெனத் தமிழக அரசைத் தமிழ்நாடு ஆலயப் பாதுகாப்புக் குழு வேண்டிக்கொண்டிருக்கிறது.

ஆலய நில சம்பந்தமான இந்து மக்களின் கருத்தொருமித்த கருத்தை அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்தவேண்டும். தினசரி போராட்டங்களைச்சமாளித்துவரும் நமது அமைச்சர்களுக்கு நாமாவது சங்கடம் ஏற்படுத்தாமல் இருப்போம்.

தமிழ்நாடு இந்து ஆலயப் பாதுகாப்புக்குழு சென்னையிலும் திருநெல்வேலியிலும் உபவாசம் இருந்தது. ஆங்காங்கு மாநாடு கூட்டித் தீர்மானங்களை அமைச்சரவைக்கு அனுப்பிவைத்தும் அமைச்சர்களை நேரடியாகக்கண்டு குறைகளை அறிவித்தும்வருகிறது.

ஆலய வளர்ச்சியில் அக்கரையும் ஆர்வமும் உள்ள ஒவ்வொரு இந்து குடிமகனையும், தாய்மார்களையும், அடிபணிந்து அன்புடன் கேட்டுக்கொள்வது இதுதான்.

விநாயக சதுர்த்தியன்று ஆனைமுகக்கடவுளைப் பூஜைசெய்து முடித்ததும், அல்லது அடுத்து ஒருவாரத்திற்குள் ஒருகார்டோ, கடிதமோ எடுத்துக்கொள்ளுங்கள், அதில்,

(1) இந்து ஆலய நிலங்களை எவருக்கும் பட்டா செய்து கொடுக்கக்கூடாது.

(2) ஆலயங்களுக்கு நிலங்களே நிரந்தர மூலதனமாக இருக்க வேண்டும்.

(3) ஆலய நிலங்களிலிருந்து குத்தகை வசூலிக்க சட்டத்தில் தக்க மாறுதல்கள் செய்து ஆலய பூஜை நிரந்தரமாக நடைபெற அரசு தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்று நான் மனப்பூர்வமாக வேண்டுகிறேன்.

என்று கடிதம் எழுதிக் கையொப்பமிட்டு,

ஆணையர்,
இந்து அறநிலைய ஆட்சித்துறை,
நுக்கம்பாக்கம் ஹைரோடு, சென்னை - 34.

என்ற விலாசத்திற்கு ஸ்டாம்பு ஒட்டி தபாலில் சேர்த்துவிடுங்கள்; ஒருகடிதம் எழுதுபவர் ஒருகோயிலில் விளக்கேற்றிவைத்த புண்ணியமும், ஒரு கோயிலில் பூஜை நடத்திய புண்ணியமும் அடைவார்கள்.

இந்து அறநிலையங்களைச் சார்ந்து ஐம்பதாயிரம் ஊழியர்கள் இருக்கிறார்கள். அவர்களைச் சார்ந்த லட்சோபலட்சம் மக்களுக்கு அன்னதானம் செய்த புண்ணியமும் கடிதம் எழுதியவர்களுக்குச் சேரும்.

இருந்த இடத்திலிருந்தே இதனைச் செய்து இந்து ஆலயம்உயர்வு பெற, நிலைபெறத் தாங்கள் ஆணையருக்குக் கடிதம் எழுதுங்கள். தங்கள் நண்பர்கள், உற்றார், உறவினர் அவர்களையும் கடிதம் எழுதச் செய்யுங்கள் என்று அன்புடன் பணிவுடன் அனைவரையும் வேண்டுகின்றேன்.

அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார்,
தலைவர்,
தமிழ்நாடு இந்து ஆலயப் பாதுகாப்புக் குழு,
19, லாலா லேன், தேரடிக் கடைத்தெரு,
திருச்சிராப்பள்ளி 2.

---

# பாம்பு தீண்டிய பெண்ணைக் காப்பாற்ற 26 கோழிகள் சாவு

மணப்பாறையை அடுத்த கொடும்பாளூர் அருகில் உள்ள மாதராபட்டி பஞ்சாயத்துத் தலைவரும், பெரும் நிலச்சுவான்தாருமான சுவாமிநாதக் கோனார் என்பவரின் தம்பி மனைவி சிட்டம்மாள், வயது 28.

சம்பவத்தன்று விடியற்காலை மணி 4 இருக்கும். கோழி கூவியது. கூவல்கேட்டு, தூங்கிக்கொண்டிருந்த சிட்டம்மாள் வீட்டிற்குவெளியே வாசலுக்கு வந்தாள்.

அப்பொழுது திண்ணைக்கு அடியில் படுத்திருந்த நல்லபாம்பு சிட்டம்மாளைத் தீண்டியது. உடலில் விஷம்பரவி உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தாள்.

அவரை மணப்பாறையிலுள்ள டாக்டர் பாண்டியனிடம்கொண்டு சென்றனர்.

அவர் முதலில் ஒரு கோழியைக் கொண்டுவரச்சொல்லி அதன் ஆசனவாயைப் பாம்புதீண்டிய இடத்தில் வைத்தார். சிட்டம்மாளின் உடலில் பரவிய பாம்பின் விஷம் சிறிது கோழியின் உடலில் பாய்ந்தது. அதனால் கோழி துடிதுடித்து இறந்தது. மீண்டும் மற்றொருகோழி. இப்படி 26 கோழிகள் இறந்தன.

27 ஆவது கோழி இறக்கவில்லை. அதனால் சிட்டம்மாளின் உடலில் பாய்ந்த பாம்பின் விஷம் முழுவதும் வெளியேறிவிட்டது தெரியவந்தது. சிட்டம்மாள் புத்துயிர்பெற்று வீட்டிற்கு அனுப்பப் பட்டாள்.

நன்றி: — தினமணி 13—8—78

சிறுகதை :

# சத்தியம் கரைந்தது

## வித்துவான். திருமதி. ப. நீலா எம். ஏ.

[ மலர் 37, இதழ் 9 பக்கம் 421 தொடர்ச்சி ]

சிவப்பிரகாசர் நினைத்துப் பார்க்கிறார். வேதம் என்ற ஒன்றுடன் திருவாசகத்தை இணைத்துப் பார்க்கிற அவர் மனம் சுழல்கிறது. எவ்வகையிலும் வேதத்தைவிடக் குறைந்ததில்லை திருவாசகம். சொல்லப்போனால் வேதம் ஓதினால் மனம் கரைந்து நிற்பவர்களைக் காணோம். திருவாசகம் ஒருகால் ஓதவே கண்களில் தொடுமணற் கேணிபோல் சுரந்து நீர்பாய்கின்றனவே.

வேதம் ஒரு குறிப்பிட்ட வகுப்பாருக்கே சொந்தமாகி - மற்றவர் கள் ஓத - பயில வாய்ப்புத் தராமல் இருக்கும் இந்நிலையைப் பார்க்கும்போது 'பூசுரர் நான்மறை மட்கலம் நிகர்க்கும்'. 'மதுர வாசகம் பொற்கலம் நிகர்க்கும்' என்று கூறி மகிழ்கிறார். திருவாசகம் ஓதின் முத்தியே உறும் பயன் என்றால் வேதம் ஓதினால் கிடைப்பது விண்ணுலகாதி பயன்கள் மட்டுமே என்பதையும் சுட்டுகிறார்.

இதை உணராதவர்கள் திருவாசகம் எல்லோராலும் படிக்கப் பெறுவதால் மலிவான 'மட்கலம்' போன்றது என்றும், சிலரால் மட்டுமே தெரிந்துகொள்ளத்தக்க வேதம் 'பொற்கலம்' போன்றது என்றும் பொருள்கொள்ளும்படியாக,

பொற்கலம் நிகர்க்கும் பூசுரர் நான்மறை
மட்கலம் நிகர்க்கும் மதுரவாசகம்

என்பர். ஈற்றடி 'வேதம் ஓதின் மெய்ப்பயன் அறமே' - என்று முடி கிறது. மதுரவாசகம் என்ற சொல்லை 'மட்கலம் நிகர்க்கும்' - என்ப தோடு சேர்த்துப்படித்துவிட்டால் 'ஓதின் முத்தியுறுபயன்' என வாக்கியம் எழுவாய் இல்லாமல் இருக்கும்.

பாடலை நீங்களே படியுங்கள் - உவமைத்திறனை எப்படிக் கொள்வது என்பது உங்களுக்கே விளங்கும்.

திருவார் பெருந்துறைச் செழுமலர்க் குருந்தின்
நீழல்வா யுண்ட நிகரிலா னந்தத்

தேன்தேக் கெறியும் செய்ய மாணிக்க
வாசகன் புகன்ற மதுர வாசகம்
யாவரும் ஓதும் இயற்கைத் தாதலின்
பொற்கலம் நிகர்க்கும்; பூசுரர் நான்மறை
மட்கல நிகர்க்கும் : மதுர வாசகம்
ஓதின் முத்தி யுறுபயன் ;
வேத மோதின் மெய்ப்பயன் அறமே.

திருவாசகத்திற்குப் பெருமை தந்த உவமையை இதுவரை ஆய்ந்தோம். இனி திருவாசக உவமைகளில் சிலவற்றை எண்ணுவோம். கட்டுரையில் 'எறும்பிடைப்பட்ட நாங்கூழ்' 'வெள்ளத்துள் நாவற்றியாங்கு' என்ற இரண்டு உவமைகளும் அதி யற்புதமாய் விளக்கம் செய்யப்பட்டிருந்தது. கட்டுரையின் கடைசி யில் வந்த உவமை விளக்கம் சிந்தனைக்கு இனியதாய் இருந்தது இப்படி.

ஊராமிலேக்க குருட்டா மிலேத்ததுபோல்:

திருவாசகம் இந்தத் தமிழகத்தின் பாரம்பரியச் சொத்து. மொழியை மட்டும் அறிபவர்களால் தமிழக மக்களின் எண்ணங்களை - இதய தாபங்களை அறியமுடியாது. கவிஞன் தன் உள்ளத்து உணர்வு களுக்கு வார்த்தைகளை வடிகாலாக்கிக் கொண்டிருப்பதை ஒவ்வொரு பாடலும் உணர்த்தும்.

'ஊரா மிலேக்க குருட்டா மிலேத்ததுபோல்' - என்ற வரியை இப்போது பாருங்கள். Dr. G. U. Pope மொழிபெயர்க்கும்போது 'ஊர்ப்பசுவிற்கு முடிசூட்டி எனவே குருடுக்கு முடிசூட்டி' என்ற என்ற பொருளில் 'To crown the village cow and so have crowned the blind' - என எழுதியிருக்கிருர். ஆனாலும் அடிக் குறிப்பாக, பொருள் விளங்கவில்லை வீணில் முயன்றேன் என்பதாக இருக்கலாம் என்று எழுதியுள்ளார்.

கோவுடனே கூடியதோர் குருட்டாவும் ஊர்புகுதும் என்று உமாபதிசிவம் குறிக்கிருர். இந்த உவமைக் கருத்து இதுதான். 'தெரிந்து செய்தால்தான் பக்திக்குப் பலனுண்டு என்பதில்லை. தெரி யாமல் செய்தாலும் பக்தி பக்தியே' – என்று எழுதியிருந்தது. இந்த அற்புதக் கருத்து கிடைத்த இடத்தையும் கட்டுரையாளன் குறிப்பிட் டிருந்தான் – தருமபுர ஆதீன வேளூர் கும்பாபிஷேக மலர். Dr. தேவசேனபதி M. A. Ph. D., என்பதாக. கட்டுரைதந்த முடிவுரை யோடும் முடிந்திருந்தது.

Dr. பார்த்தசாரதியின் ஜட்ஜுமென்டே சரி என்பதைக் நானும் என் கையொப்பத்தை இட்டுவிட்டு - பேப்பர் கத்தையை ஒரே கட்டாகக் கட்டி அப்பால் போட்டுவிட்டு, சிறிது உலாவிவர வெளிக் கிளம்பினேன். வழக்கமான இடத்திற்குக் கால்கள் இட்டுச்சென்றன. நான் வரவேண்டிய பனகல்பார்க் கீழக்கோடி மூலை பெஞ்சுக்கு வந்து விட்டேன். அப்போதுதான் அங்கு அமைதியாய் வழக்கத்திற்கு மாருய் 'M P' அமர்ந்திருப்பதையும் அவருக்கு முன்பாக என் மாணவன் சதீஷ் நின்றுகொண்டிருப்பதையும் பார்த்தேன். என்னை எதிர்பாராமல் அங்குகண்ட மகிழ்ச்சியில் 'MP' உடனே தம்மருகில் இடம் தந்து அமரச்சொன்னுர்.

என்னைக்கண்ட கலக்கம் சில விஞடியில் தெளிய சதீஷ் எனக்கு வணக்கம் செலுத்திஞன். 'M P' தான் பேச்சைத் துவக்கினுர். Mr. மாணிக்கவாசகன் நான் அனுப்பிய வேலையை முடித்துவிட் டீர்களா? பாவம்... என்னுல் உங்கள் விடுமுறை மகிழ்ச்சி பாழாகி விட்டது என்று பரிவோடு என்முகம் பார்த்தார். 'No. No. what is this. Dont worry; that is also my duty Sir' என்று கூறி இப்போதுதான் பார்த்துவிட்டு இப்படி உலாவ வந்தேன். உங்கள்... சதீஷைப் பார்த்துக்கொண்டே.... இவனுக்குப் புரியவேண்டாம் என் பதுபோல் 'I agree your selection' – என்றேன்.

அவர் விடுவதாயில்லை. Mr மாணிக்கவாசகன்; கட்டுரையில் எண்ணைக் குறிப்பிட்டுள்ளதால் உம்மால் ஆளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. I st Rank அதிருஷ்டசாலி யார் தெரியுமா? இதோ நிற்கும் உம் மாணவன் 'சதீஷ்' தான் என்றுர். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. சதீஷ் என்னைப்புரிந்துகொண்டவன் ஆனபடியால் அவன் இப்போது மௌனம் கலைந்தான். அவன் பார்வை 'MP' பக்கமிருந்தாலும் என்னிடந்தான் பேசினுன். 'சார்... என்னை நீங்க முதல்லே மன்னிச்சேன் என்ருல்தான் எனக்கு மேலே பேச்சுவரும்.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. என்னப்பா சத்யம்இதெல்லாம்- ஆமாம் நான் ஒருத்தன்தான் அவனைப் பழைய பெயர் சொல்லிக் கூப்பிடுவேன். இந்த 'சதி' 'சதீஷ்' எல்லாம் எனக்குப்பிடிக்காது.

'சார்... இப்போ 'MP' யை அழைக்கும் முறை. நான் சொல்ற விஷயம் அத்தனையும் உண்மைசார்'. அவர் குறுக்கிட்டு 'சரி... சத்தியப் பிரமாணம் முடிச்சாச்சு... மேலே செல்' என்ருர் நகைச் சுவையுடன்.

ஏனே சதீஷ் கண்களிடம் கர்சிப் சென்று மீண்டது. 'சார்... நான் Mr. S. M. கிளாஸ் எல்லாத்துக்கும் போவேன் - திருவாசகம்

ஒன்ணைத்தவிர. அவர் கண்கள் வியப்பால் விரிந்தன - எனக்குத் தான் தெரியுமே. கிளாஸை அட்டெண்ட்பண்ணுமே பஸ்டுபிரைஸ் வந்துடுத்தா......எனக்கு விளங்கவில்லையே என்று அவர்முடிப்பதற்கு முன் குறுக்கிட்டான் அவன்.

சார்! S. M. க்குத் தெய்வபக்தி ஜாஸ்தி. அவர் தோய்ந்து கலந்து நடத்தும் திருவாசக வகுப்புக்களை மாணவர் வாயிலாகக் கேட்டுக் கொண்டு திருப்தி படுகிறேன். என்னமோ...கொஞ்சம் இளமைக் கிறுக்கலில் உடை, நடை எல்லாத்திலேயும் ஹிப்பியிசத்திற்கு அடிமையாயிட்டேன். 'M. P.' லேசாகச் சிரித்தார். அவனுடைய ஆங்கில வார்த்தைக்காகவா! அறியாமைக்காகவா!

இந்தக்கோலத்தோடு பக்திபூர்வமான திருவாசக வகுப்பில் உட்கார்ந்தால் யாராவது பரிகசிப்பார்களோ என்று ஆரம்பத்தில் தயங்கப் போய் அப்படியே அது நிலைத்துவிட்டது. ஆகவே மற்றவர்களுக்கு விட்டுத்தராமல் இருக்க நான் கிளாஸை விட்டுத்தரவேண்டியதாயிற்று. ஆனல் ஊரா (ஊர் ஆக்கள்) மிலைக்க குருட்டா (குருட்டு - ஆ - பசு) மிலைக்குமாமே! அப்படி எனக்குன்னு ஒண்ணும் தெரியாவிட்டாலும் நண்பர்கள்வழியாக S. M. குரலைப் பதித்துக்கொண்டிருக்கிறேன் நெஞ்சில். என் நெஞ்சில் பதிந்த திருவாசகம் என்னைக் கைவிடலை என்பதைத்தான் தங்கள் கணிப்பு (1 St- Rank தகுதியைக் குறிப்பிடுகிறுன்) காட்டுகிறது.

அவர்களெல்லாம் தெரிந்து - வெளிப்படையாய் ஆசிரியர் பாதையிட அதில் நடக்கிறுர்கள் - ஊர்வந்தது அவர்களுக்குத்தான் தெரியும். ஆனல் நான் குருடு சார்...... அவர்கள் சொல்லித்தான் எனக்குத் திருவாசகம் தெரியும். அவர்கள் உணர்த்த நான் உணர்ந்து குருட்டா கன்றை நினைந்து கனைப்பதுபோல் கனைக்கிறேன். அந்தக் கன்று அதைப் புரிந்துகொள்ளாதா சார்...... என்று மீண்டும் கண்களில் கர்சீப்பை ஒற்றியெடுக்கிறுன்.

நான் எழுந்து அவனைத் தழுவிக்கொண்டேன். 'சத்யா...... உன்னைப் புரிந்துகொள்ளாத நான்தாண்டா பொய். பொய்வெளியிலெல்லாம் உண்மையைத்தேடினேன்டா......சத்யம் கண்களில் படவில்லை. கன்று பசுவைப் புரிந்துகொண்டதுபோல் உன்னைப்புரிந்து கொண்டேன். குருட்டுப் பசுவானுலும் ஊரா வழிகாட்ட உணர்ந்து ஊர்சேர்ந்ததுபோல் நீயும் உன் லட்சியத்தை அடைந்துவிட்டாய்டா என்று நெகிழ்ந்து கண்கசிந்தேன்.

**அந்தக் கண்ணீரில் என் சத்யமும் அவன் பொய்மையும் கரைந்து சத்யானந்தம் பிறந்தது.**

---

உ

சிவ சிவ

# திருக்குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டம்

## கும்பகோணம்

## அறநிலையங்கள் பற்றிய தீர்மானங்கள்

1. தமிழகத்திலுள்ள திருக்கோயில்களும் கோயில் நித்தியநைமித்திக வழிபாடும் என்றென்றும் நிலையாக இருந்து விளங்கவேண்டுமென விரும்பிய தமிழ்நாட்டு மூவேந்தர்களும், குறுநில மன்னர்களும், பெருநிலக்கிழார்களும் என்றென்றும் அழிவில்லாததான விளைநிலங்களையும் திருக்கோயிலைச் சூழ்ந்த இடங்களையும் கோயில்களுக்கும் திருமடங்களுக்கும் உரிமையாக்கினர்கள். அந்த நிலங்களை அவர்கள் கருத்துக்கு மாருக எவருக்கும் பட்டாசெய்து கொடுக்கக்கூடாது என்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

2. திருக்கோயில்களுக்கும், திருமடங்களுக்கும் பிற அறநிலையங்களுக்கும் சொந்தமான நிலங்களைக் குத்தகைக்கு வைத்துக்கொண்டு இருப்பவர்களுக்குச் சாதகமாக இன்று பயன்படுத்தும் சட்டங்களை மாற்றியும், திருத்தியும், அமைத்து, குத்தகைக்கு ஒப்புக்கொண்டு குத்தகை கொடுக்காதவர்களிடமிருந்து நிலங்களைத் திரும்பப் பெறவும், பாக்கிகளை உடனடியாக வசூலிக்கத் தகுதியான முறையில் நடவடிக்கை எடுக்கவும் வழிவகை செய்யும் வகையில் அமைத்துக் கொடுக்கவேண்டியபரிகாரம்செய்ய இந்து சமய அறநிலைய சட்டத்தில் வேண்டிய திருத்தங்களை இதுபோது நடைபெறும் சட்டமன்றக் கூட்டத்திலேயே செய்யவேணுமாய் தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறது.

3. தமிழகத்தில் பேரூர் சிற்றூரில் இருக்கும் திருக்கோயில்கள் பல பாழடைந்து விழுந்துவிடும் நிலையில் உள்ளன. அக்கோயில்களை யன்றி மற்றும் பலகோயில்கள் நித்திய பூஜைக்கு வேண்டிய பொருளாதாரம் இல்லாத நிலையில் உள்ளன. தீபங்களைப் போட முடியாதபடி அவல நிலையிலும் இருக்கின்றன. வழிபாட்டுக்குப் போகும் காலத்தில் இக்கூட்டத்து அடியார்களே கண்டு மனம் வேதனைப்பட்டிருக்கிருர்கள். இவைகளைச் செம்மைசெய்ய நிதிமிகுந்த கோயில்களில் உபரி வருவாயில் ஒதுக்கீடு செய்து நிதி குறைந்த கோயில்களுக்கு உதவவேணுமாய் தமிழக அரசையும் இந்து சமய அறநிலையத் துறையினரையும் இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது. அரசியல் கொள்கை காரணமாக இன்று இருக்கும் கருத்து வேறுபாடுகள் சில ஆண்டுகளில் மாறவும் கூடும். ஆகவே என்றும் நிலையாக இருக்கவேண்டிய ஸ்தாபனங்களை வருங்காலத்தை எதிர்நோக்கி நன்கு பராமரிக்க வேணுமாய்த் தமிழக அரசையும் இந்து சமய அறநிலையத் துறையினரையும் இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

**கடிதம் :**

## ஆவணிமூலத் திருநாள்

# வாழ்த்துப் பாடல்கள்

சிவம்பெருக்கித் தமிழ்வளர்த்துச் சீலம் ஓங்கச்
சித்தாந்த நெறிபரப்பித் தருமை வாழும்
நவம்பெருக்கும் சண்முகதே சிகப்பேர் கொண்ட
நன்மணியே, ஆண்டுதொறும் புலவர் போற்றச்
சுவைபெருக்கும் தமிழரங்கு பலவும் கூட்டித்
துணையற்ற பணிசெய்யும் தேவே, நின்னைக்
கவர்குணத்துக் குன்றமெனக் கருது கின்றேன் ;
காலமெல்லாம் நீடூழி வாழி ! வாழி !

ஆவணிமூ லத்திருநாள் அழைப்புப் பெற்றேன் ;
ஆதீனக் கல்விநிலை யங்கட் கெல்லாம்
மாவணிசேர் ஆண்டுவிழா நடக்கு மென்ற
மகிழ்வுறுக்கும் செய்தியையும் அறிந்து வந்தேன் ;
தூவணியார் தோத்திரமும் சாத்தி ரத்தின்
தொகையினையும் ஆராயும் விழாஅ ரங்கும்
மேவுமொரு பட்டத்தைத் தரும்வி ழாவும்
விளங்குமென அறிந்துபெரு மகிழ்ச்சி பெற்றேன்.

நெல்லைமண்ணுக் குயர்புகழை வாங்கித் தந்த
நெறியாளன் டி.கே.சி. அடிபின் பற்றி
நல்லகவி யின்னதென அறிந்து போற்றி
நாள் நாளும் சுவைக்கின்ற ரசிகச் செம்மல்
தொல்லைநறுந் தமிழினொடும் ஆங்கி லத்தும்
சுடர்கின்ற பேரறிஞன் ; ப்ரெஞ்சும் கற்றோன் ;
வல்லபெரு நீதிமன்ற நடுவ ராகி
மாண்புற்றோன் மகராஜன் என்னும் பேரோன்.

பண்படுத்தும் திருவுளத்தான் ; பாப்பருகும் பேரறிவன் ;
நண்பருக்குப் பெருநண்பன் ; நாவன்மை மிகவுடையான் ;
திண்பெருக்கும் உறுதியுளான் ; தேவேநின் பாராட்டாம்
கண்படைத்தான் நல்லஇலக் கியரசிக மணியானன்.

வண்டமிழ்த்தேன் பருகுகின்ற வண்டென்னும் மகராஜன்
திண்டிறலோ டிலங்கிப்பல் லாண்டினிது திகழ்வுறுக
மண்டும்அரு ளாற்புலவர் வாழவழி வகுக்கின்ற
தொண்டியற்றும் நின்புகழ்கள் சுலவுகஇவ் வுலகமெலாம்.

அன்பன்,

சென்னை.
9—9—78.

கி. வா. ஜகந்நாதன்.

ந. ரா. முருகவேள், M. A., M. O. L. சென்னை,
ஆசிரியர், 'திருக்கோயில்' 9—9—78.

... ... எம்போன்றாரின் பேரன்பிற்கும், பெருமதிப்பிற்கும், பெரும் போற்றுதலுக்கும் உரிய அன்பியற் பெருந்தகை, நீதிபதி. திரு. எஸ். மகராஜன் அவர்களுக்கு குருமகாசந்நிதானம் அவர்கள் "இலக்கிய ரசிகமணி" என்னும் பட்டம் அளித்துச் சிறப்பிக்கும் செய்தியறிந்து, அளவிலா மகிழ்ச்சி அடைகின்றேன்.

மாட்சிமை மிக்க நமது நீதிபதி அவர்கள் இலக்கியங்களைச் சுவைத்து மகிழும் ரசிகமணிமட்டும் அல்லர்; ரசிகர்களுக்கெல்லாம் தலைமணியாய் - அவர்களுக்கெல்லாம் ஓர் இலக்கியமாய் (I deal & Examplary) விளங்கிச் சிறந்து திகழ்பவர்! அவர்களின் திருமந்திர விளக்கச் சொற்பொழிவுகள், கம்பராமாயணப் பேருரைகள் முதலியன பல்லாயிரக் கணக்கான மக்களைப் பரவசப்படுத்தி மகிழ்வித்து உய்வித்து வருகின்றன. அவர்கள் செய்துவரும் சட்ட நூல்களின் தமிழாக்கம் இணையற்ற தமிழ்ப் பெருந்தொண்டாகும். "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்" என்ற பாரதியாரின் விருப்பத்தினை நிறைவேற்றும் வகையில், நீதிபதி அவர்கள் செய்துள்ள "ஷேக்ஸ்பியர் நாடகங்களின் தமிழாக்க நூல்கள்" தமிழ் அன்பர்களுக்கெல்லாம் அரிய பெரிய விருந்தாக அமைந்து, பெரிதும் பயன்பட்டு வருகின்றன.

அமரர் ரசிகமணி டி. கே. சி. அவர்களின் இலக்கிய நெறி வாரிசு என்று யாவரும் போற்றிப் புகழுமாறு திகழும் மாட்சிமை மிக்க நம் நீதிபதி அவர்களுக்கு, ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் "இலக்கிய ரசிக மணி" என்று பட்டம் வழங்கிச் சிறப்பிப்பது, சாலவும் பொருந்துவதாகும்! இப்புனித நன்னாளில் பட்டம் வழங்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்கும், பட்டம் பெறுகின்ற பெருந்தகைமைசான்ற நமது நீதிபதி அவர்களுக்கும் என் அன்பார்ந்த பணிவுமிக்க வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைத்திறம் மிக்கார்; கவிநயம் நுகர்வார்;
கம்பனார், கவின்திரு மூலர்
வியத்தகு பெருநூல் விரிவெலாம் விளக்கும்
மேன்மையார்; ஷேக்ஸ்பியர் நூல்கள்
நலத்தமிழ் செய்தார்; சட்டநூல் தமிழில்
நல்குவார்; மகராஜன் அவர்கள்
இலக்கிய ரசிக மணியெனும் பட்டம்
ஏற்றனர்; வாழிநீ டூழி!

ந. ரா. முருகவேள்.

# செய்திகள்

## ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் மாத ஜன்ம நக்ஷத்திரமாகிய இம்மாத ஆயில்யத் திருநாள் வழிபாடு 1—9—78 அன்று திருத்தென்குடித்திட்டை, திருப்புள்ளமங்கை, திருச்சக்கரப்பள்ளி ஆகிய மூன்று திருத்தலங்களிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. அவ்வத் தலப் பதிகமும் அச்சிட்டு வழங்கப்பட்டது. காலை 9 மணியளவில் தென்குடித்திட்டை ஆலயத்தில் திருக்கருகாவூர் திரு. கோ. சிவஞானம், மாலை 4 மணியளவில் திருப்புள்ளமங்கை ஆலயத்தில் அக்கோயில் நிர்வாக அதிகாரி திரு. கே. கே. விஜயகுமார் தலைமையில் தருமையாதீனக் கல்லூரி முதல்வர் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., இரவு 7 மணியளவில் திருச்சக்கரப்பள்ளி ஆலயத்தில் திரு. வி. சா. குருசாமிதேசிகர் எம். ஏ.. திரு. கோ. சிவஞானம் ஆகியோர் சமய விரிவுரைகள் நிகழ்த்தினர். அன்பர்கள் வழிபாட்டில் கலந்துகொண்டு கண்டும் கேட்டும் இன்புற்றனர்.

## ஸ்ரீ மறைஞானசம்பந்தர் குருபூஜை விழா

தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் சந்தானாசாரியர்களுள் மூன்றுமவராக விளங்கிய ஸ்ரீ மறைஞான சம்பந்தருக்கு 4—9—78 அன்று அவரது குருபூஜைத் திருநாளை முன்னிட்டு விசேஷ அலங்கார ஆராதனைகள் நடைபெற்றன. மாலை 7 மணி அளவில் அதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம்.ஏ., ஆதீனஉயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் ஆகியோர் சமய விரிவுரைகள் நிகழ்த்தினார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்கு அருட்பிரசாதம் வழங்கியருளினார்கள். சிதம்பரம், திருக்களாஞ்சேரி சிங்காரத்தோப்பில் ஸ்ரீ மறைஞான சம்பந்தர் குருமூர்த்த ஆலயத்திலும் தருமையாதீனச் சார்பில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன.

## சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில்

# மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு

1978 ஜூலைமாத சமயப் பிரசார வழிபாடு 30—7—78 ஞாயிற்றுக்கிழமை சென்னை பெத்தநாயக்கன் பேட்டையில் ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ காசி விசுவநாதசுவாமி ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. வழிபாட்டின்போது நிலைய ஓதுவார் திரு P. A. குப்புசாமி முதலியாரும், சென்னை அயன்புரத்தில் உள்ள திரு. சின்னமணியும் திருமுறைப் பாராயணம் செய்தனர்.

வழிபாட்டிற்குப்பின் சமயப் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. நிலைய அன்பர் திரு. V. V. கமலநாபன் அவர்கள் வரவேற்புரை கூறினர்.

அடுத்துப் பேசிய திரு. கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியார், வழிபாடு எவ்விதம் செய்ய வேண்டுமென்பதுபற்றி விளக்கும்போது, கோபுரத்தைக் கண்டவுடன் ஸ்தூலலிங்கமாகக் கருதிக் கீழேவிழுந்து வணங்கவேண்டும். பிறகு கோயிலுக்குள் சென்று விநாயகர், சுவாமி, அம்பாள், சோமாஸ்கந்தர், முருகன், கஜலட்சுமி, நால்வர், கடைசியாக சண்டேஸ்வரர் இம்மூர்த்திகளை வணங்கி, மூன்றுமுறை வலம்வந்து வழிபாட்டை முடிக்கவேண்டும். அந்தந்தச் சந்நிதிக்குரிய அருள்மிகு பாடல்களை மனமுருகப் பாடவேண்டும். கோயிலில் இருக்கும்போது சிவசிந்தனையோடும் அல்லது திருமுறை ஓதிக் கொண்டும் இருக்கவேண்டும். ஆண்டவனை வணங்கினல் நலன்களைப் பெறலாம் என்ற கருத்துக்களை விளக்கினர்கள்.

அடுத்து வித்துவான் திரு. A. நாராயணசுவாமி அய்யர், வழி பாடாற்றும்போது இறைவனுடைய உரு ஸ்தாபிக்கப்பட்டகாலம், வரலாறு முதலியன அறியவேண்டுவது மிக இன்றியமையாததாகும். இந்த பெத்தநாயக்கன்பேட்டை கோயிலில் சிவலிங்கம் அமைக்கப் பட்டு 200 ஆண்டுகள் கடந்து, ஐந்து தலைமுறைகள் ஆகின்றன. இவ்வைந்து தலைமுறைகளிலும் ஸ்தாபிக்கப்பட்டோருடைய பரம்பரை யோரால் பரிபாலிக்கப்பட்டு சிறப்புற்றுத் திகழ்கின்றது. இக்கோயிலின் அமைப்பால் பொலிவுற்றிருந்த இவ்விடம் ஆன்மீகத்தோடு சிறப் புற்று விளங்குவதாகும். ஸ்ரீ காசியிலிருந்து சிவலிங்கத்தையும் அம்பாளையும் கொண்டுவந்து அமைக்கப்பட்டதால் ஸ்ரீகாசிவிஸ்வநாத சுவாமி கோயில் என்று பெயர் அமைத்து, காசியைப்போல் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. சிதம்பரத்தைப்போலவே இக்கோயிலினுள் பெருமாள் திருக்கோயில் விளங்குகிறது. இது ஒரு தனிச்சிறப்பாகும். கோயில் அமையப்பெற்று ஆனித்திருமஞ்சனவிழாமுதலியன சிறப்புற

நடைபெற்றுவருகின்றன. இத்தகைய திருக்கோயில்களின் வரலாறுகளையும் ஆன்மீகத்தையும் மக்களிடையே பரப்புவதற்குச் சென்னை தருமையாதீனப் பிரசார நிலையம் மாத வழிபாடு நடத்திப் பிரசாரம் செய்கிறது. இதனால் நாட்டில் ஆன்மீகம் தழைத்தோங்குவதற்குக் காரணமாகின்றது என்று பேசினார்கள். திருக்கோயில் அறங்காவலர் சார்பில் திரு. நாகராஜன் அவர்கள் ஆதீனப் பணியைப் பாராட்டிப் பேசினார்கள்.

## நாயன்மார் குருபூஜைகள்

கூற்றுவ நாயனார் குருபூஜை 1—8—78 லும், பெருமிழலைக் குறும்பர் குருபூஜை 9—8—78லும், சுந்தரர்,கழறிற்றறிவார்குருபூஜை 10—8—78 லும், கலிய நாயனார் கோட்புலிநாயனார் குருபூஜை 13—8—78லும், செருத்துணை நாயனார் குருபூஜை 30—8—78லும், புகழ்த்துணைநாயனார், அதிபத்தநாயனார் குருபூஜை 31—8—78லும் பூஜை மடத்தில் சிறப்பாக நடைபெற்றது. திரு. V. N. ஆறுமுக முதலியார் பெரியபுராணம் வாசித்து விளக்கம் செய்தார்கள். ஸ்ரீஅப்பர் குருகுல மாணவர்களும் அன்பர்களும் கேட்டுப் பயனடைந்தனர். எல்லோருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

## கிருத்திகைப் பிரசாதம் வழங்குவ் விழா

இவ்விழா 26—8—78 சனிக்கிழமை மாலை 7 மணிக்கு நிலைய மன்றத்தில் நடைபெற்றது. விழாவிற்குத் தமிழ்நாடு அட்மினிஸ்டிரேட்டர் ஜெனரல் & அபிஷியல் டிரஸ்டி திரு. T. N. சிங்காரவேலு B. A., B. L., அவர்கள் தலைமை வகித்தார்கள். அவர்கள் தம் தலைமையுரையில் கூறியதாவது :- வேளூர் செல்வமுத்துக்குமாரன் பொருட் செல்வத்தையும் அருட்செல்வத்தையும் வாரி வழங்கும் வள்ளல். கயிலைக்குருமணிஅவர்கள்,ஆட்சிக்காலத்தில் வேளூர்கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடத்தினார்கள். அப்போது நான் D. C. ஆக தஞ்சையில் இருந்தேன். ரூ. 6 லட்சம் செலவில் திருப்பணி பூர்த்தியாகி மிகச்சிறப்பாகக் கும்பாபிஷேகம் செய்வித்தார்கள். வைதீகக் காரியங்கள் குறையாமல் சாஸ்திரோக்தமாக நடைபெற்றது. மூன்று ஆண்டுகளில் D. C. ஆகப் பணியாற்றியபோது 40 கோயில்களில் கும்பாபிஷேகம் செய்தேன். அவை திருவருளால் நிறைவு எய்தின என்றுகூறி ஆதீனச் சமயப்பிரசார நிலையத்தின் பணியைப்பாராட்டித் தம் நன்றியையும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்திற்குத் தெரிவித்துக் கொண்டார்கள்.

## மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு

27—8—78 ஞாயிற்றுக்கிழமை மாலை எழும்பூர் கெங்குரெட்டி ரோட்டில் உள்ள ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ செல்வவிநாயகருக்கும் ஸ்ரீ சுப்பிரமணியருக்கும் விசேஷ

அபிஷேக ஆராதனைகள் அர்ச்சனைகள் செய்யப்பட்டு, திருமுறைப் பாராயணமும் நிகழ்த்தப்பெற்றன.

வழிபாட்டுக் கூட்டத்தின் தொடக்கத்தில் ஆலயத்தின் நிர்வாக அதிகாரி திரு. சுவாமி வெங்கடாசலம் அவர்கள் எல்லாரையும் வர வேற்றுப் பேசுகையில். சென்னை தருமையாதீன சமயப் பிரசார நிலைய சுவாமிகள் தலைமையில் வழிபாட்டுக் குழுவினர் முறையாக வழிபாடு நடத்தி மெய்சிலிர்க்க வைத்தார்கள். இதனால், கோயில்களினால் என்ன பயன் என்பதனைச் சொல்லாமல் அறியமுடிந்தது. பிரசார நிலைய வழிபாட்டுக் குழுவினர்கள் இந்தக்கோயிலுக்குவந்த முகூர்த் தம் கோயில் பிரசித்தம் அடைகிறது. இப்பகுதி மக்களை ஈர்த்துப் புனிதப்படுத்தி இறையருளுக்கும் பாத்திரமாக்குகிறார்கள். ஒவ்வொரு நாளும் எவ்வாறு வழிபாடு செய்யவேண்டுமென்று நடத்திக்காட்டி னார்கள். இந்தத்தொண்டு மிகவும் போற்றிப் பாராட்டக்கூடியது. அடிக்கடி நிலைய சுவாமிகள் இக்கோயிலுக்குவந்து அறிவுரைகூறி நல் வழி காட்டவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். திருப்பணிக் குழுத் தலைவர் திரு. கிருஷ்ணமூர்த்தி அய்யர் எல்லாருக்கும் மாலை அணிவித்து நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொண்டார்.

தொடக்கவுரை நிகழ்த்திய திரு. R. சிவஞானம் செட்டியார் நாம் நல்வழி அடையத் தியானம் செய்யவேண்டும்; தியானத்தை இம் மாதிரி கூட்டு வழிபாட்டில் கலந்துகொண்டு பலருடன் சேர்ந்து செய்வது சிறந்தது என்று கூறினர்.

அடுத்துப் பேசிய வித்துவான் திரு. A. நாராயணசாமிஐயர் அவர்கள், இக்கோயில் செல்வவிநாயகர் கோயில் என்று அழைக்கப் பட்டாலும், ஆறுபடை வீடு அமர்ந்த முருகப் பெருமான் திரு வுருவங்கள் இங்கே தனித்தனியாக அமைக்கப்பெற்றுப் பூசிக்கப் படுவது சிறப்பான அம்சம். இக்கோயில் 200 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டது. அருகில் ஏரிகள் இருந்தன. ஏரிகாத்த இராமனைப்போல இவ்விநாயகப்பெருமான் ஏரியினால்இப்பகுதியில்வசிக்கும்மக்களுக்குத் துன்பம்வராமல் காப்பவர். அதனால் ஏரிகாத்த விநாயகர் என்ற பெருமையுடையவர். செல்வவிநாயகர் என்றால் இவ்வுலக வாழ்க் கைக்கு வேண்டிய பொருட்செல்வத்தையும், மேலுலக வாழ்க்கைக்கு வேண்டிய அருட்செல்வத்தையும் அளிப்பவர். ஆதலால் முன்னோர் களால் செல்வவிநாயகர் என்று செல்லமாக அழைக்கப்பட்டார் என்று கூறினர்.

அரக்கோணத்தில் கல்வி அதிகாரியாக இருக்கும் திரு. திருஞான சம்பந்தம் அவர்கள் பேசுகையில் சென்னை தருமையாதீன சமயப்

பிரசார நிலையம் செய்துவரும் தொண்டுகளில் மிகச்சிறந்தபணியாக வழிபாட்டைச் சொல்லலாம். வழிபாடு என்பது இறையருளைப்பெறுவதற்குரிய நெறியில் நின்று வாழ்வதாகும். மனம், மொழி, மெய் மூன்ருலும் செயற்படுவதே வழிபாட்டின் நோக்கம். ஒவ்வொருவரும் இந்த வழிபாட்டில் கலந்து கொள்ளவேண்டும். உயர்ந்த இந்த வழிபாடு முறையாக செய்யப்படுவது போற்றுதற்குரியது. இதில் அனைவரும் கலந்து பயனடையவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அடுத்துப்பேசிய குமாரி R. கௌரி, நாம் எப்போதும் 'நமசிவாய' என்ற மந்திரத்தைச் சொல்லி வழிபடவேண்டும் என்று சொல்லி, 'நமசிவாய' மந்திரத்தால் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர் ஆகிய நால்வரும் நிகழ்த்திய அற்புதங்களை விளக்கிக் கூறினர்.

முடிவில் நிலைய சுவாமிகள் எல்லாருக்கும் நன்றிகூறியபின், திருப்பணிக்குழு அங்கத்தினர் பேசும்போது, "சிறந்த முறையில் வழிபாடு ஆற்றி எங்கள் உள்ளங்களை நெகிழச்செய்த நிலைய சுவாமிகளுக்கும், வழிபாட்டுக் குழுவினருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்" என்று சொல்லி தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டார்.

## EXTRACT FROM THE VISITOR'S BOOK

### Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkazhi.

It was a worth while evening to have spent it in the sacted precincts of this ancient temple which is kept neat and tidy in spite of the odds that such institutions face on account of the non - realisation of rent from the lands.

The traditions of the Dharmapuram Adhinam are kept up here

Mr. JUSTICE V. SETHURAMAN.
High Court, Madras.

5—9—78.

# எதிர்காலம்

## ஜோதிஷம், திரு. ந. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

**( காளயுக்திஹு புரட்டாசி 1உ முதல் 31உ முடிய )**

**( 17—9—78 முதல் 17—10—78 முடிய )**

ஸ்ரீ காளயுக்திஹு புரட்டாசிமீ 1உ பானுவாரம் உத்திரட்டாதி நக்ஷத்திரம் பாலவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 8 நாழிகை 12 விளுடிக்குத் துலா லக்கினத்தில் ஸ்ரீ லோக ரட்சகரான சூரியபகவான் சிம்ம ராசியிலிருந்து கன்னியாராசி சங்கிரமணமாகப் புரட்டாசிமாதப் பிரவேசம் செய்தருளுகிருர். அவர் லோகத்தில் சிருஷ்டி தெய்வமாக விளங்கி, பிரஜைகளுக்கு மதிநுட்பமும் மேலான வாழ்க்கையும் அளித்து இரட்சித்துவருவார். லோகத்தில் விஞ்ஞான அறிஞர்களின் சாதனைகள் மேலோங்கும். தொழில் விற்பன்னர்கள் புதிதான படைப்புகளை பிரஜைகளின் தேவைக்கு வேண்டிய அளவு உற்பத்தி பெருக்கி வெளியிடுவர். நாட்டில் ஆங்காங்கு சிறுதொழில் நிறுவனங்கள் அரசு உதவியுடன் ஏற்பட்டு முன்னேற்றத்துடன் திகழும். கலைஞர்களின் இசை, நடனம், ஓவியம், சிற்பம் ஆகிய கலைகள் நாகரீக முன்னேற்றத்துடன் விளங்கும்.

உலகிலுள்ள திருமடங்கள் ஆசாரியபீடங்களில் திருவமர்ந்துள்ள ஞானகுருமகான்கள் லோகத்துக்குத் திருவாய்மலர்ந்து அருளுகின்ற ஞான உரைகளினுல் மக்கள் விவேக அறிவாற்றலுடன் விளங்குவர். ஆன்ருேர்களால் லோகதர்மங்கள் தெய்வ கைங்கர்யங்கள் ஆகிய புண்ணிய காரியங்கள் நடந்துகொண்டிருக்கும். தேசத்தலைவர்களால் பிரஜாபிரதிநிதிகளால் நீதிபரிபாலனுதி தேசநல சேவைகள், அறநிலையப் பாதுகாப்பு தர்மகாரியங்கள் ஆகியவற்றில் செங்கோலாட்சி நடைபெற்றுவரும். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் தெய்வ பூசைகள் சிறப்புவிழாக்கள் நடைபெற்றுவரும். லோகமக்கள் மனத்தெளிவுடன் திடசித்தமாக மேலான செயல்புரிந்து நல்வாழ்க்கை நடத்திவருவார்கள்.

**1. மேஷம் :- அசுவதி - பரணி — கார்த்திகை ¼**

( சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. - அ. )

மேஷராசி 9 பாதங்களும் சுபபலன்தரும். குடும்பாபிவிருத்தியில் பண வருமானங்கள் வந்து கொண்டிருக்கும். சகோதரருக்கு அரசாங்கத்தில் நன்மையுண்டாகும். வித்தியாவியாபாராதி கலைத்துறைகளில்

நற்பலன் வந்து கொண்டிருக்கும். வாகன சுகம் திருப்தி அளிக்கும். நல்லோர் பிரபலஸ்தர்களின் சந்திப்பு ஏற்படும். ஓர்புனித ஸ்தலம் சென்றுவருதலாகும். ரோகம் நிவர்த்தியாகும். விவகாரங்களில் ஜெயம் ஏற்படும். அரசாங்கத்தில் நன்மதிப்பை உண்டாக்கும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். செய்தொழில்கள் சிறப்பாக நடைபெற்றுவரும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

**2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி – மிருகசீர்ஷம் ½**
**( இ. ஊ. ஏ. - ஒ. வ. வி. வூ - வே. வோ. )**

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவருமானங்கள் கௌரவநிலைமையில் வரவாகிக் கொண்டிருக்கும். சகோதரர் நலம் நன்ருக இருந்துவரும். புதிய இயந்திரசாதனம் ஒன்று வாங்கநேரும். வித்துவத்துவம் கலைத்துறை யில் 20உ க்குமேல் நன்மைகளை ஏற்படுத்தும். விவசாயத்தில் விருத்தி பலன் உண்டாகும். கண்ணில் வலி நரம்புத்தளர்ச்சி ஆகிய நலிவு கண்டு குணமாகும். ஞாயிற்றுக்கிழமை சூரியார்ச்சனைசெய்ய நலம் தரும். தாம்பத்தியவாழ்வு சுமுகமாக நடந்துவரும். செய்தொழில் சாதாரணமாக நடந்துகொண்டிருக்கும். செவ்வாய் புதன் சுபமாகும்.

**3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ - திருவாதிரை – புனர்பூசம் ¾**
**( கா. கி. - கு. க. ங. ச்சா. - கே. கோ. ஹ. )**

மிதுனராசி 9 பாதங்களும் சுபபலனைத் தரும். குடும்பாபிவிருத்தி யில் நல்ல பணவருமானங்கள் வந்து கொண்டிருக்கும். சகோதரர் சுகம் நன்ருக இருந்துவரும். கால்நடை வாகனங்களில் விருத்திகர மான பலன் ஏற்படும். வித்தியாவியாபாராதிகளில் மேன்மைஸ்திதியை ஏற்படுத்தும். விருந்து உபசாரம் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் நடக்கும் தாரபுத்திரர் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ராஜாங்க செல்வாக்கும் மேலிடத்திய போற்றுதல்களும் ஏற்படும். செய்தொழி லில் பிரபலம் ஏற்படும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

**4. கடகம் :- புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.**
**( ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ. )**

கடகராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானங்கள் கணிசமாக வந்து கொண்டிருக்கும். சகோதரர் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். பொதுநலகாரியங்களில் நற்பெயர் உண்டாகும் எல்லாப்பிரச்சினைகளையும் திடசித்தத்துடன் எளிதில் நிறைவேற்றுகின்ற ஆற்றல்தரும். வாகன சுகம் திருப்தியளிக்கும். புத்திரனுக்கு சுகம்தரும். கதாகாலட்சேபம் தெய்வநாம பாராயணம்

ஆகிய புனித வசனங்களில் மனம் மகிழ்ச்சியாகும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வபக்தியாக நடக்கும். செய்தொழில் இலட்சுமி கடாட்சம் பொருந்த நடந்துவரும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

**5. சிம்மம் :- மகம் - பூரம் – உத்திரம் ¼**

( ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே. )

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பணச்செலாவணி சரளமாக இருந்துவரும். வாக்கு கண்யம் மேலாக இருந்துவரும். சம்பிரதாய விசேஷங்களில் பொருட் செலவுகளை ஏற்படுத்தும். சகோதரர் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். வண்டி வாகனுதி சௌகரியங்கள் மேலாக இருந்துவரும். விவசாயத்தில் விருத்தி ஏற்படும். புத்திரனின் தொழில்துறையில் மேன்மைஸ்திதி உண்டாகும். தாம்பத்திய வாழ்க்கை சுமுகமாக நடந்துவரும். செய்தொழிலில் காரிய சாதனைகளை ஏற்படுத்தும். செவ்வாய் புதன் சுபமாகும்.

**6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½**

( டோ. பா. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ. )

கன்னியாராசி 9 பாதங்களும் நற்பலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானங்கள் வந்துகொண்டிருக்கும். சகோ தரருக்குச் சௌக்கியம்தரும். வித்தியாவியாபாராதி கலைத்துறைகளில் 20உ முதல் நல்ல ஆதாயங்களைத் தரும். வாகனசுகம் இருப்பிட சௌகரியம் திருப்திகரமாக இருந்துவரும். விவசாயத்தில் அபிவிருத்தி பலன் ஏற்படும். புத்திரனுக்கு மேன்மைஸ்திதி ஏற்படும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வபக்தியாக நடந்துவரும். செய்தொழிலில் முன்னேற் றம் ஏற்படும். வெள்ளி சனி சுபமாகும்.

**7. துலாம் :- சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾**

( ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே. )

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் தனவருமானங்கள் மேலும் மேலும் வந்துகொண் டிருக்கும். சகோதரர் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். இயந்திர வாகனங்களில் திருப்திகரமான நிலைமையாக இருந்துவரும். வித்தியா வியாபாராதிகளில் முன்செலவுடன் நற்பலன் வந்துசேரும். ஒப்பந்த லேவாதேவிகளில் முன்பொருள் முடங்கும். தீர்த்தயாத்திரா பலன் கிடைக்கும். புத்திரர்களின் சௌக்கியம் தாரசௌக்கியம் நன்ருக இருந்துவரும். செய்தொழிலில் உயர் அந்தஸ்தை ஏற்படுத்தும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

**8. விருச்சிகம் :- விசாகம் $\frac{1}{4}$ அனுஷம் - கேட்டை.**

(தோ. - ந. நி. நு. நே. - நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பத்தில் தனாதி சௌகரியங்கள் மேலாக இருந்துவரும். சகோதரருக்குச் சௌக்கியமும் மேன்மைஸ்திதியும் ஏற்படும். ஸ்திரீவழியினர் முன்னேற்றத்திற்கான ஈடுபாடுகளை உண்டுபண்ணும். பூமி இயந்திரங்களில் விருத்திபலனாக இருந்துவரும். கல்வியில் கலைத்துறையில் அரசாங்கத்தில் நன்மைகளை ஏற்படுத்தும். தாரசௌக்கியம் புத்திரசௌக்கியம் நன்றாக இருந்து வரும். செய்தொழிலில் பிரபல்யம் ஏற்படும். செவ்வாய் புதன் சுபமாகும்.

**9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$**

(யே. யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடந்துவரும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானங்கள் சீராக இருந்துவரும். இருணங்களில் நிர்ப்பந்தநிலைமை இராது. மூத்தசகோதரர் நலம் நன்றாகஇருந்து வரும். இளைய சகோதரருக்கு ஆயாசம் ஏற்படும். எழுத்துமூல காரியங்களில் அரசாங்க அனுகூலங்கள் ஏற்பட்டுச் சித்தியாகும். விவகாரங்களில் அனுகூலம் தோன்றினும் அசுபர் பார்வையால் பாதிக்கநேரும். தாம்பத்தியவாழ்வு சுமுகமாக நடந்துவரும். செய் தொழிலில் அரசாங்க நன்மை ஏற்பட்டுக்கொண்டிருக்கும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

**10. மகரம் :- உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் -அவிட்டம் $\frac{1}{2}$**

(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)

மகர ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் தனவருமானங்கள் சீராக இருப்பினும் தக்க சமயத்தில் மதிப்பான பொருள் கைக்குவரும். சகோதரர் நலம் நன்றாக இருந்து வரும். மதி நுட்ப காரியங்களில் நற்பலன் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். மேலோர் பெரியோர் பிரபலஸ்தர்களின் நல்ல அபிப்பிராயமும் அவர்களால் நன்மைகளும் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். தார புத்திரர் களுக்குச் சௌக்கியம் அளித்துவரும் செய்தொழிலில் அனுபவ சாத்தியத்தினால் மேன்மை ஸ்திதி ஏற்பட்டுக்கொண்டிருக்கும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

**11. கும்பம் :- அவிட்டம் $\frac{1}{2}$ - சதயம் 1 - பூரட்டாதி $\frac{3}{4}$**

(கு. கே. - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா.)

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பத்தில் பண வருமானங்களில் சிக்கல் நீங்குவதாகி வந்துகொண்டிருக்கும்.

சகோதரர் சகோதரிகளின் நலம் நன்குக இருந்துவரும். விவசாயத்தில் விருத்தி பலன் ஏற்படும். கால்நடை வாகனப் பிராப்தி பால்பிராப்தி திருப்தியளிக்கும். புத்திரனின் கல்வி தொழில் துறைகள் மேலோங்கும். வழக்கு விவகாரங்களில் அனுகூலம் காணும். தாம்பத்திய வாழ்வில் மன வெறுப்பாக இருப்பினும் சௌகரியங்களை அளித்துவரும். செய் தொழிலில் மேன்மை ஸ்திதியை உண்டுபண்ணும். செவ்வாய் புதன் சுபமாகும்.

**12. மீனம் :– பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி.**
(தி. - து. ஸ. ச. த. - தே. தோ. ச. சி.)

மீன ராசி 9 பாதங்களும் நற்பலன் தரும். குடும்பாபிவிருத்தியில் பண வருமானங்கள் மிகவும் திருப்திகரமாக வந்துகொண்டிருக்கும். சகோதரர் சகோதரிகளுக்குப் பாக்கிய விருத்தியையும் சௌக்கியத்தையும் அளித்துவரும். கால்நடை வாகனங்கள் விருத்தியாகும். புத்திரர் பௌத்திரர்களின் சௌக்கியம் நன்குக இருந்துவரும். 20உ க்குப் பிறகு வித்துவத்தில் வியாபாராதி கலைத்துறைகளில் கணிசமான பொருள் வந்துசேரும். மனைவிக்குச் சிரோபாதை போன்ற நலிவு தோற்றி உடன் வைத்தியத்தால் குணமாகும். செய்தொழிலில் பிரபல நிலைமையாக இருந்துவரும். வெள்ளி சனி சுபமாகும்.

---

## குருமணியின் அருளாசிகளிலிருந்து திரட்டிய
## அருள் ஞானக் கொடை

# தவம் எது?

தவம் பலவகைப்படும். காட்டிலோ, மலைமுழைகளிலோ சென்று தங்கி உண்டி சுருக்கி மேற்கொள்ளும் அருமை எதுவும் இன்றி வீட்டிலே இருந்து எல்லோரும் செய்யும் எளிமையான தவத்தை அபிராமிபட்டர் கூறுகின்றுர்; சின்னஞ்சிறிய இடையில் பட்டாடை உடுத்தியவளாயும், உயிர்களை ஊட்டி வளர்க்கும் பொன்னம்பெரிய தனபாரத்தை உடையவளாயும், அத்தனபாரத்தில் முத்தாரம் அணிந்தவளாயும், முல்லை மலர் சூடிய கரிய கூந்தலை உடையவளாயும், சூரியன் சந்திரன் அக்னி ஆகிய மூன்று கண்களை உடையவளாயும் உள்ள அன்னை அபிராமியைத் தனியிருந்து தியானம் செய்தலே மேலான தவம். — இரா. செ.

# அன்னை அருள்மாலை

திருமுறைக் கலாநிதி

**வேலூர், திரு. க. சொக்கலிங்க ஓதுவார்.**

மற்றிணையில்லாத் திருச்செம்பொன் பள்ளியுள்
மருவார் குழலியம்மையே
மனமகிழும் மலர்ச்சோலை மருவுதிரு நனிபள்ளி
மலையான் மடந்தையம்மை
வற்றாத வாவிசூழ் ந்திரு வலம்புரம்
வடுவகிர்க் கண்ணம்மையே
வையத்து ளோர்தலை வணங்குதலைச் சங்காடு
மகிழ்சௌந் தரநாயகி
கற்றாரும் மற்றாரும் கைதொழும் ஆக்கூர்
கன்னிவாள் நெடுங்கண்ணியே
காலனைக் காலால் உதைத்தகட வூர்தனுள்
கண்கண்ட அபிராமியே
பற்றுவார்க் குற்றநோய் தீர்க்கும் பரமேட்டியே
பண்ணிலுறு பெண்ணமுதமே
பஞ்சின்மெல் லடியிணையைத் தஞ்சம்அடைந் தென்றும்
பணிவேற்கருள் அன்னையே. (13)

---


# "ஞானசம்பந்தம்"

## தருமையாதீனத் திங்கள் இதழ்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை யாதீனத்திலிருந்து வெளிவருவது. சமயப் பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பிவைக்கவும்.

| | | |
|---|---|---|
| **ஆண்டுச் சந்தா** (உள்நாடு) | ரூ. | 7—00 |
| **ஆண்டுச் சந்தா** (சிலோன்) | | 9—00 |
| **ஆண்டுச் சந்தா** (வெளிநாடு) | | 15—00 |
| **ஆயுள் சந்தா** ... ... | | 100—00 |

செயலாளர் :— ஞானசம்பந்தம் செயலகம்,
தருமபுரம், மாயூரம். 609001.
தஞ்சை மாவட்டம்.